Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com

நவம்பர்-2023
நாடார் :13
முரசு :11



# இந்தியன் நாடார் முரசு

INDIAN NADAR MURASU

விலை
ரூ.15/-


ராயல் D:கார்த்தீசன்


A.குணசேகர்


V.பன்னீர்செல்வம்


S:தயாளன்


K:அன்பழகன்




குட்வில் R:சித்தர்ராஜ்


கனி J:பிரிட்டோ


கிரேஸ் P.கிறிஸ்டோபர்


K.N:ஜெயக்குமார்


P.மனோகர்

நவம்பர் **18** ல்
பிறந்தநாள் விழா காணும்...

நெல்லை, தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கம் தலைவர்
போரூர் வட்டார நாடார்கள் மகமை சங்க தலைவர்
தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநில துணைத்தலைவர்
நாடார் மகாஜன சங்க சென்னை மாவட்ட செயலாளர்

## போரூர் V.ஆனந்தராஜ்

அவர்களுக்கு

**இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.**

# விண்ணக வாழ்வின்
# 25-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

"இறைவா, உம் சன்னதியில் வந்து சேரும்வரை எனக்கு அமைதியில்லை " (2கொரி.6:9)

மனிதரோடு
**7.5.1945**



இறைவனோடு
**16.11.1999**

## திருமதி. சுபத்திரா ஜூலியன்

*சிறுவனாய் இருந்தேன், மனிதனாக்கினாய்*
*ஒருவனாய் இருந்தேன், பலராக்கினாய்;*
*தெரியாதவனாயிருந்தேன், பிரபலப்படுத்தினாய்;*
*அன்னையாகவும், தோழியாகவும், துணையாகவும்*
*எனக்கு நீ இருந்தாய்*
*என் ஓய்வு கால நேரத்தில்.*
*நம் வாழ்வில் புதிய அத்தியாயம் துவங்கும் வேளையில்*
*நீ இறைவனிடம் இணைந்து விட்டாய் !*

என்றும் நினைவுடன்

கணவர்: K.M. **ஜூலியன்** ( ஆசிரியர், இந்திய நாடார் முரசு, வடவை)
மக்கள் : **J.அரசு, J.எல்மா ஜெயக்குமார் & J.ரேஷ்ஷ்மா ஜான்**
மருமக்கள் : **மேரி அரசு. A.I.அந்தோணி ஜெயக்குமார் & T.ஜான் ஜெயக்குமார்**
பேரப்பிள்ளைகள் :
**I.அனிஷ், A.அபிஷேக். I.ஆக்னெஸ், J.கெவின், J.கெனித்,&A.சானியோ**

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

*கௌரவ ஆசிரியர்:* **விஜய்வசந்தகுமார்.**

*பேராசிரியர்:* **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA.,

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்:தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்

தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ்

தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.

தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர் டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுருஷோத்தமன்,M.A.,B.Ed

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIA NADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FAITH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.

விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100

ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,

தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு

ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100

ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:

The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian

IFSC Code: KVBL0001651.

**A/c No: 1651173000000900**

**Google Pay : 9382172884 paytm 9382172884**

# ஆசிரியர் உரை

## சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!



அனைவருக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள். தற்காலங்களில் உலகமே பல சோதனைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறது. அரசியல் தலைவர்களெல்லாம் மக்களை ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் யாருமே மக்கள் நலனுக்காக ஆட்சி செய்கிறார்களா என்பது தெரியவில்லை ஆட்சியில் அமர்ந்த உடன் அவர்கள் எண்ணம் எல்லாம் தன்னை அதே பதவியில் தன் சந்ததியினரை வளர்ப்பதிலும் வாழையடி வாழையாக தானே பதவி சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே செயல்பட்டு வருகிறார்கள். அதற்காகவே உள்நாட்டில் கலவரங்கள் அண்டை நாட்டோடு போர் போன்றவற்றில் கவனம் செலுத்தி நாட்டையும் தன்னை தேர்ந்தெடுத்த மக்களையும் மறந்தே போய்விடுகிறார்கள். மக்களிடம் என்ன சொன்னால் உணர்ச்சி வசபடுவார்களே அதையே கிளரிவிடுவது பாமர ஜனங்களை ஏமாற்றி தன்னோடு சேர்ப்பது இல்லாததையும் பொல்லதையும் மனம் கூசாமல் கூறுவது போன்ற மாய வார்த்தைகளை பேசி நாட்டையே சிதைக்கும் தலைவர் தான் உலக அளவில் காணப்படுகிறார்கள். இப்போதெல்லாம் பல கட்சி தலைவர்கள் இளைஞர்கள் மேல் ஒரு பார்வை வைத்திருக்கிறார்கள், அவர்கள் வழிக்கு எந்த இளைஞன் ஒத்துப்போகிறானோ அவனுக்கு பல சலுகைகளும் பண வசதிகளையும் செய்து கொடுத்து அவர் வழியாக பல இளைஞர்களை வலைவீசி தன் வயப்படுத்திவிடுகிறார்கள்.

ஒரு ஊரில் வார சந்தை கூடும் பாரம்பரிய சந்தையில் வழக்கமுள்ள அந்த சந்தையின் ஒரு வியாபாரி கவுதாரி வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அங்கே ஒரு செழிப்பான கவுதாரியை ஒரு சிறந்த கூண்டில் அடைத்து வைத்து அந்த கவுதாரிக்கு மட்டும் விலை 5ஆயிரமாக கூறினார் மற்ற ஒரு வலையில் நிறைய கவுதாரிகளை வைத்து ஒரு கவுதாரி 100ரூபாய் மட்டுமே என்று விலை பேசி விற்று கொண்டிருந்தார். கவுதாரி வாங்க வந்த பலரும் இந்த வியாபாரியை பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். பலரும் சேர்ந்து ஒரு கூட்டமே கூடிவிட்டது. இந்த வியாபாரியே எதையும் பெரிதுபடுத்தாது வந்திருக்கும் அனைவரையும் இன்முகத்தோடு கபட எண்ணத்தோடு தனது வியாபார தந்திரத்திரத்தால் தன் வசம் வைத்து கொண்டிருந்தார். பலரும் அந்த வலையில் இருந்த கவுதாரியை வாங்கி சென்றனர் கடைசியில் ஒரு வாடிக்கையாளர் அந்த வியாபாரியிடம் அந்த கூண்டில் அடைத்துள்ள கவுதாரி மட்டும் ஏன் அந்த விலை என்று கேட்டார் அதற்கு அந்த வியாபாரி அந்த ஒரு கவுதாரியை வைத்துதான் என்னால் இத்தனை ஏமாந்த கவுதாரிகளையும் வலையில் வீழ்த்த முடிந்தது அந்த கவுதாரிக்கு ஒரு தனி குரல் உண்டு அந்த குரலால் மற்ற ஏமாந்த அத்தனை கவுதாரியையும் வசீகரிக்க முடியும் ஆகவே தான் அந்த கவுதாரிக்கு அத்தனை விலை கொடுக்கவேண்டும் என்றார். ஆகவே நாடார்களே நம் சமுதாயத்திலும் அந்த வசீகர கவுதாரிகளை போன்ற இளைஞர்கள் இருக்கிறார்கள் அவர்கள் பல இளைஞர்களை வலையில் வீழ்த்தி பல அரசியல்வாதிகளிடம் ஒப்படைத்து, அரசியல்வாதிகளை அவர்கள் சுய வளர்ச்சிக்காக பல சமுதாயங்களை உடைத்து சிதைத்து சின்னாபின்னமாக்கி விடுகிறார்கள் சமுதாயமும், நாடும் கலவர காடாகவும், போர் களமாகவும் மாறிவிடுகிறது. ஆகவே இளைஞர்களே! உங்கள் தனி முன்னேற்றைத்தை இழந்து விடாதீர்கள் நம் நாட்டையும், சமுதாயத்தையும் காப்போம்!!!

# என் தந்தையின் அறிவுச் சிந்தனைகள்!

## 2.எம் மதமும் சம்மதம்

என் தந்தையின் நட்பு உலகம்:

என்அருமைத் தந்தையார் அவர்கள் சிறுவயதில், தான் ஒன்றாப் பழகி வந்த நண்பர்களை, தான் உயர்ந்த நிலைக்கு வந்தபோது, அவர்களை மறவாமல், அவர்களுக்குத் தகுந்த மதிப்பளித்து அவர்களோடு நல்லுறவு கொண்டிருந்தார்.

அவர் ஏழையாக இருந்தகாலத்திலும் வசதி இல்லாத நேரத்திலும் அவருக்கு உதவி செய்தவர்களையும், உறுதுணையாக இருந்தவர்களையும் அதே நட்போடும், மரியாதையோடும் நன்றி மறவாமல் அவர்களை கௌரவித்து வருவதும், அவ்வப்போது நடக்கும் கூட்டங்களில், அவர்களைப் பற்றி உயர்வாக சொல்லிக் கொள்வதிலும் பெருமை கொள்வார். அதே போல், தனக்கு வேலை தந்த முதலாளிகளைத் தேடிச்சென்று அடிக்கடி சந்திப்பதும் வழக்கம். நானும் சிலசமயங்களில் நினைப்பதுண்டு தந்தைக்கு வசதிகள் பெருகி, பேரும் புகழும் இருந்தும் கூட, அவருடைய முதலாளிகள் எங்களுடைய இல்லத்திற்கோ அல்லது அலுவலகத்திற்கோ வந்துவிட்டால், தன்னுடைய எல்லா வேலைகளையும் ஒதுக்கிவிட்டு, "என்னுடைய முதலாளி வந்து விட்டார். என் முதலாளி வந்துவிட்டார்" என்று மகிழ்ச்சியோடு அவரை வரவேற்று, "எங்களுடைய முதலாளி" என்று எங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பார்.



அந்த நேரத்தில், எனக்குள் ஓர் எண்ணம் எழும். அதாவது வந்தவர் கருப்பாக, வயது முதிர்ந்தவராக கதர்சட்டையும், வேட்டியும் அணிந்து, கண் கண்ணாடியோடு பார்ப்பதற்கு மிகவும் பரிதாபத்திற்குரிய தோற்றத்துடன் எல்லாவற்றையும் இழந்துவிட்டு இருக்கும் அவரை, இந்த அளவில் நேசத்தோடும், பாசத்தோடும் என் தந்தை பழகுவதைப் பார்த்து எனக்குள் ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

இங்கே, வள்ளுவரின் திருக்குறள்கள் நினைவுக்கு வருகிறது.

நன்றி மறப்பது நன்றன்றுநன்றல்லது
அன்றே மறப்பது நன்று (குறள் - 108)

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது குறள் -102)

என் தந்தையார், தன் இளமைக் காலத்தில் தனக்கு வேலை தந்த முதலாளியை இத்தனை ஆண்டுகள் கழித்தும் தான் புகழ் ஓங்கி நின்ற நிலையை அடைந்திருந்தாலும் எவ்வளவு உயர்வான நிலைக்குச் சென்ற போதிலும், வயதான முதலாளிகளை என் தந்தை கௌரவப்படுத்தி, மதித்து வந்ததை, எனக்கு ஒரு பாடமாக எடுத்துக்கொள்வேன்.

யாரால் துரத்தப்பட்டு சென்னைக்கு வர நேர்ந்ததோ, அவர்களை அழகப்பபுரத்தில் நேரில் சந்தித்த போது, (பெருமாள் நாடாரை) காலைத் தொட்டு கும்பிடுவார். இதெல்லாம் பார்த்தவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கின்றேன். இதற்கும் ஒரு குறள் உண்டு.

இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல் (குறள்-314).

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயந் தெரிவார்

என் தந்தையின் வாழ்க்கை, குறள் காட்டும் ஒளி விளக்காக அல்லவா அமைந்திருந்தது.

வி.சி.சண்முகம் என்னும் நண்பர்

கன்கார்டியா என்னும் பள்ளியில் என் தந்தையார் படித்திருந்த காலத்தில் வி.சி.சண்முகம் என்பவர் சகமாணவராக இருந்தார். மாலை நேரம் பள்ளியை விட்டு திரும்பும் வேளையில், இருவரும் சந்தோசமாக திண்பண்டம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே வருவார்களாம்.

என் தந்தையார் வாழ்ந்த அழகப்பபுரம் என்னும் கிராமத்திற்கு அருகில் உள்ள கள்ளிக்குளத்தில் ஓர் மலை அந்த மலையின் மீது "பனிமாதா" என்ற கிறிஸ்தவ கோயில் உண்டு. என் தந்தையாருடைய பெற்றோர் பனிமாதா ஆலயத்திற்குச் சென்று வருவார்கள்.

என் தந்தையார் பிறந்த நாளும் பனிமாதா திருவிழா நடைபெறும் நாளும் ஒரே நாளில் (ஆகஸ்டு 4) அமைந்ததால் அந்த பனிமாதாவை மனதில் வைத்து பனிதாஸ் என்ற பெயரைச் சூட்டினார்கள். பின்னால் அதுவே பன்னீர்தாஸ் என அழைக்கப்பட்டார். அப்பெயரே நிலைத்துவிட்டது. தொடரும்............




உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813

பேபி. புரோட்டீன்ஸ்

WHOLESALE & RETAIL

2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.



Prop.S.Balakrishnan

(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)

SELVAM TRADERS

New No : 7, Old No : 6, Medavakkam Main Road, Madippakkam, Chennai- 600 091

Ph: 9841193884, 044-22242096



# விழித்தெழு!! இளைஞனே...விழித்தெழு

*உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்....*
*தன்னம்பிக்கை வெற்றி தரும்.!!!*

தன்னம்பிக்கையும் வெற்றியும் பெரும்பாலும் கைகோர்த்துச் செல்லும். உங்களையே நீங்கள் அறிந்தால், உங்களிடம் தன்னம்பிக்கை இருந்தால், உங்கள் திறன்களை நீங்கள் நம்புகிறீர்கள், மேலும் ஆபத்துக்களை எடுத்து உங்கள் இலக்குகளைத் தொடர அதிக வாய்ப்புள்ளது. இது உங்கள் தொழில், உறவுகள் அல்லது தனிப்பட்ட முயற்சிகள் என வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களில் வெற்றியை அடைவதற்கான அதிக வாய்ப்புக்கு வழிவகுக்கும்.



தன்னம்பிக்கை என்பது ஒரு மனநிலை மற்றும் அதை வளர்த்து வளர்க்க முடியும். உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கவும் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவும் சில குறிப்புகள் இங்கே.

❖ உங்கள் பலத்தை அடையாளம் கண்டு அங்கீகரிக்கவும்: உங்கள் தனிப்பட்ட குணங்கள், திறமைகள் மற்றும் சாதனைகளைப் பற்றி சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்குங்கள். உங்கள் பலத்தை உணர்ந்து அதில் கவனம் செலுத்துவது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.

❖ யதார்த்தமான இலக்குகளை அமைக்கவும்: உங்களுக்காக அடையக்கூடிய இலக்குகளை அமைத்து, அவற்றை சிறிய, நிர்வகிக்கக்கூடிய படிகளாக உடைக்கவும். இந்த சிறிய மைல்கற்களை நிறைவேற்றுவது படிப்படியாக உங்கள் நம்பிக்கையை வளர்க்க உதவும், மேலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளுக்கு வழிவகுக்கும்.

❖ உங்கள் வெற்றிகளைக் கொண்டாடுங்கள்: உங்கள் சாதனைகள் எவ்வளவு சிறியதாகத் தோன்றினாலும் அவற்றை அடையாளம் கண்டு கொண்டாடுங்கள். இந்த நேர்மறை வலுவூட்டல் உங்கள் தன்னம்பிக்கையை மேம்படுத்தி, தொடர்ந்து முன்னேற உங்களை ஊக்குவிக்கும்.

❖ தோல்வியை ஒரு கற்றல் வாய்ப்பாக ஏற்றுக்கொள்: தோல்வி என்பது வாழ்க்கையின் இயல்பான பகுதியாகும், அதை ஒரு பின்னடைவாக பார்க்கக்கூடாது. மாறாக, தோல்வியைக் கற்கவும், வளரவும், மேம்படுத்தவும் வாய்ப்பாகக் கருதுங்கள். பின்னடைவுகளின் போது நேர்மறையான மனநிலையைப் பேணுவது, நீங்கள் வலுவாக மீண்டு வரவும், வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவும்.

❖ சுய பாதுகாப்பு பயிற்சி: உங்கள் உடல் மற்றும் மன நலனை கவனித்துக் கொள்வது தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு முக்கியமானது. உடற்பயிற்சி, போதுமான தூக்கம், ஆரோக்கியமான உணவு மற்றும் நினைவாற்றல் நடைமுறைகள் போன்ற சுய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

❖ நேர்மறையான தாக்கங்களுடன் உங்களைச் சுற்றி வையுங்கள்: உங்களை ஆதரிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் நபர்களுடன் உங்களைச் சுற்றி வையுங்கள். உங்களை வீழ்த்தும் அல்லது உங்கள் தன்னம்பிக்கையை ஊக்கப்படுத்தும் நபர்களுடனான தொடர்புகளை வரம்பிடவும். நேர்மறையான உறவுகள் உங்கள் மீதும் உங்கள் திறன்கள் மீதும் உங்கள் நம்பிக்கையை வளர்க்கும். நிச்சயமாக! தன்னம்பிக்கையை வளர்ப்பது என்பது பயிற்சி மற்றும் சுய பிரதிபலிப்பு தேவைப்படும் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். வழியில் உங்களுக்கு உதவும் சில குறிப்புகள் இங்கே.

❖ எதிர்மறையான சுய பேச்சுக்கு சவால் விடுங்கள்: உங்கள் உள் உரையாடலுக்கு கவனம் செலுத்துங்கள் மற்றும் சுய-கட்டுப்படுத்தும் நம்பிக்கைகளை நேர்மறையான மற்றும் ஊக்கமளிக்கும் எண்ணங்களுடன் மாற்றவும். அதற்கு பதிலாக உங்கள் பலம், சாதனைகள் மற்றும் திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்துங்கள்.

❖ சிறிய இலக்குகளை அமைத்து அடையுங்கள்: உங்களுக்கு அர்த்தமுள்ள இலக்குகளை அடையாளம் கண்டு, சிறிய, அடையக்கூடிய படிகளுடன் தொடங்கவும். ஒவ்வொரு சாதனையும் உங்கள் நம்பிக்கையை வளர்க்கும் மற்றும் பெரிய சவால்களை எதிர்கொள்ள உங்களை ஊக்குவிக்கும்.

❖ உங்கள் வெற்றிகளைக் கொண்டாடுங்கள்: சிறிய வெற்றிகளைக் கூட ஒப்புக்கொண்டு கொண்டாடுங்கள். இந்த நேர்மறையான வலுவூட்டல் உங்கள் திறன்களை அடையாளம் காணவும் தன்னம்பிக்கையை வளர்க்கவும் உதவும்.

❖ சுய பாதுகாப்பு பயிற்சி: உங்கள் உடல் மற்றும் மன நலனை கவனித்துக்கொள்வது தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு முக்கியமானது. நீங்கள் ரசிக்கும் செயல்களில் ஈடுபடுங்கள், தவறாமல் உடற்பயிற்சி செய்யுங்கள், சீரான உணவை உண்ணுங்கள், போதுமான ஓய்வு பெறுங்கள். நீங்கள் உடல் ரீதியாக நன்றாக உணரும்போது, அது உங்கள் சுய உருவத்தை சாதகமாக பாதிக்கும்.

❖ நேர்மறையுடன் உங்களைச் சூழ்ந்து கொள்ளுங்கள்: உங்களை நம்பும் ஆதரவான மற்றும் மேம்படுத்தும் நபர்களுடன் உங்களைச் சுற்றி வையுங்கள். உங்கள் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் எதிர்மறை தாக்கங்களை தவிர்க்கவும். நேர்மறையான உறவுகள் ஊக்கத்தை அளிக்கும் மற்றும் நேர்மறையான மனநிலையை பராமரிக்க உதவும்.

❖ தோல்வியை ஒரு கற்றல் வாய்ப்பாக ஏற்றுக்கொள்: தோல்வி குறித்த உங்கள் பார்வையை மாற்றவும். தனிப்பட்ட குறைபாடாகவோ அல்லது விட்டுக்கொடுக்கும் காரணமாகவோ பார்க்காமல், வளர்ச்சி மற்றும் கற்றலுக்கான வாய்ப்பாக இதைப் பார்க்கவும். என்ன தவறு நடந்தது என்பது பகுப்பாய்வு செய்து, பாடங்களைப் பிரித்தெடுத்து, அவற்றை மேம்படுத்தி மீண்டும் முயற்சிக்கவும்.

❖ உங்கள் ஆறுதல் மண்டலத்திலிருந்து வெளியேறவும்: புதிய விஷயங்களை முயற்சிக்கவும், உங்கள் ஆறுதல் மண்டலத்திற்கு வெளியே சவால்களை எதிர்கொள்ளவும் உங்களைத் தள்ளுங்கள். ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு பயத்தை முறியடிக்கும் போது அல்லது புதிதாக ஒன்றைச் செய்யும்போது, அது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும் மற்றும் உங்கள் திறனைப் பற்றிய உங்கள் கருத்தை விரிவுபடுத்தும்.

❖ சுய இரக்கத்தைக் கடைப்பிடிக்கவும்: கருணை மற்றும் இரக்கத்துடன் உங்களை நடத்துங்கள். எல்லோரும் தவறு செய்கிறார்கள் மற்றும் குறைபாடுகள் இருப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

உங்களுடன் மென்மையாக இருங்கள் மற்றும் சுயவிமர்சனத்தை விட சுய முன்னேற்றத்தில் கவனம் செலுத்துங்கள்.

தன்னம்பிக்கையை வளர்ப்பது ஒரு தொடர்ச்சியான செயல் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் நீங்கள் பணியாற்றும்போது பொறுமையாகவும் அன்பாகவும் இருங்கள், ஏனெனில் உங்கள் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு நேரத்தையும் முயற்சியையும் எடுக்கும். பொறுமையாக இருங்கள் மற்றும் உங்கள் சுயமரியாதையை வளர்க்க ஒவ்வொரு நாளும் சிறிய நடவடிக்கைகளை எடுக்கவும். அதிகரித்த தன்னம்பிக்கையுடன், சவால்களை எதிர்கொள்ளவும், அபாயங்களை எடுக்கவும், உங்கள் இலக்குகளை அடையவும், இறுதியில் வெற்றிக்கு வழிவகுக்கும்.

யாரிடம் கற்பது விடாமுயற்சியை? கடலிடம் கற்றுக்கொள்!...! கடமை தவறாமையை கதிரவனிடம் கற்றுக்கொள்...! உத்வேகத்தை காட்டாறு பார்த்துக் கற்றுக்கொள்...! சுறுசுறுப்பை தேனீக்களிடம் இருந்து கற்றுக்கொள்!.. உழைப்பை எறும்புகளிடம் இருந்து கற்றுக்கொள்.. இயற்கை நமக்களித்த பாடப்புத்தகங்கள் இவைகள்... அதிலிருந்து பாடம் கற்று உன் வாழ்க்கையை வாழத் தொடங்கு...!

போராடும் வரை வீண் முயற்சி என்று சொன்னவர்கள் வென்ற பின் விடாமுயற்சி என்பார்கள்.

ஆயிரம் உறவுகள் நம் வாழ்க்கையில் இருந்தாலும் அவரவர் வாழ்க்கையை அவர்கள் தான் எதிர் கொள்ளவேண்டும். அவரவர் மனம். அவரவர் பாதை. அவரவர் பயணம். அவரவர் வாழ்க்கை.இதை உணர்ந்தால் வாழ்க்கை உன்வசம்...

விழித்தெழு!! இளைஞனே...விழித்தெழு...

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ் ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn, Law), Ph.D.,
**செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.**
**www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.**

# குழந்தைகள் தினம்= ஒரு ரோஜா மலர் பகிர்கிறது!!!!

**வழங்குபவர்: - திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398**

லீலா ஸ்டீபன்.

நான் ரோஜா மலர்!! என்னைத் தெரியாதார் எவருமிலர். என் அழகாலும் மணத்தாலும் அனைவரையும் கவர்வேன் நான் சிவப்பு, பிங்க் ஆரஞ்சு, மஞ்சள், வெள்ளை ஆகிய நிறங்களில் மலர்வேன். என்னை எல்லாப் பொது இடங்களிலும், குடிசை முதல் அடுக்கு மாடி வரைத் தொட்டிகளில் வைத்துப் பராமரித்து வளர்க்கிறார்கள். கோவில்களில் இறைவனுக்கு மாலையாகவும், திருமணங்களில் மணமக்களின் கழுத்தில் மாலையாகவும் அணிசேர்ப்பேன். பொதுக்கூட்டங்கள், அரசியல், மத விழாக்களில் சிறப்பு விருந்தினருக்கு மாலையாகவும், பூச்செண்டாகவும் அணிவிக்கப்படுவேன். பெண்கள் தலையில் சூட்டவும், காதலர் தினத்தில் பரிமாறிக் கொள்ளவும், வீடுகளில் நடக்கும் மங்கல, துக்க நிகழ்ச்சிகளிலும் என்னைப் பயன்படுத்துவர். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு என் பெயரைச் சூட்கின்றனர். திரைப்படங்களுக்கு என் பெயரை வைப்பதுடன், அநேக திரைப்பட பாடல்களிலும் என்பெயர் இடம் பெறும். வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதுடன் என் இதழ்கள் மருந்தாகவும் பயன்படுகிறது. பெண்டிரின் புடவை, ஆடைகளில் என் வடிவம் பெருமளவில் இடம் பெறும். இவற்றை எல்லாம் நான் பெருமையாகக் கருதவில்லை. நம் நாட்டின் தலைச் சிறந்த தலைவரான நேரு மாமாவின் கோட்டில் வீற்றிருப்பதைத்தான் மிகப் பெருமையாகக் கருதுகிறேன். இந்த நவம்பர் மாதம் 14ம் தேதி நேருவின் பிறந்த நாள் அல்லவா? நான் பேச வந்ததன் நோக்கம் இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும் என எண்ணுகிறேன். இவர் குழந்தைகள் மீது மிகவும் அன்புடையவர். எனவே இவரது பிறந்த தினம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. எனவே இன்று நேரு மாமாவைப் பற்றிப் பேசுவதில் பெருமிதம் அடைகிறேன். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் உத்திரப்பிரதேசத்திலுள்ள அலஹாபாத் (பிரயாக் ராஜ்) தில் 14.11.1889ம் ஆண்டு மோதிலால் நேருவுக்கும் சொரூபராணி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். தனது பதினைந்தாம் வயதிலேயே இங்கிலாந்து சென்று அங்குள்ள "கேம்பிரிட்ஜ்" பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேர்ந்தார். 1916ல் கமலா கவுர் அம்மையாரை மணமுடித்தார். மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் இவரது புதல்வி ஆவார். திருமதி.விஜயலட்சுமி பண்டிட் இவரது தங்கையாவார்.

நேரு நம் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் என்ற பெருமைக்குரியவர். நம் நாடு விடுதலைப் பெற்ற 15.8.1947ல் முதல் 1964வரை அதாவது அவரது மறைவு வரை பதினாறு ஆண்டுகள் பிரதமராக நற்தொண்டாற்றினார். கல்வி, பெண்டிர் மறுமலர்ச்சி, அறிவியல் தொழில் நுட்பத்திற்கு அடித்தளமிட்டவர் இவரே!! இவரது தொலை நோக்குப் பார்வையே "இஸ்ரோ" வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது. இன்றையச் சிறார்களே வருங்காலப் பாரதத்தைத் தீர்மானிக்கப் போகிறவர்கள், எனவே அவர்கள் நல்லமுறையில் வளர்க்கப்படவேண்டும் என



அறிவுறுத்தியவர். நாட்டின் விடுதலைப் போரில் ஒன்பது ஆண்டுகள் சிறை சென்றுள்ளார். அப்போது பல நூல்களை எழுதினார். அவற்றுள் The Discovery of India என்ற நூல் இந்திய வரலாற்றுச் சிறப்பை உலகறியச் செய்தது. சீர்த்திருத்தவாதியான இவர் "பாரத ரத்னா" விருது பெற்றுள்ளார். சிறுவர்களுக்காக "The Children Film Society of India" வை ஏற்படுத்தியது இவர் சிறார் மீது கொண்ட அபிமானத்தை வெளிப்படுத்துகிறது.

நேரு குழந்தைகள் மீது மிக அன்புடையவர் குழந்தைகளும் இவரை நேருமாமா" எனப் பாசத்தோடு அழைக்கின்றனர். நேருவின் கோட்டில் அமர்ந்திருக்கும் என்னைப் பார்த்ததுமே சிறு குழந்தைகள் கூட நேருவை அடையாளம் கண்டுவிடும்! இது எனக்குத் தனிப் பெருமை!

பாடச்சாலைகளில் குழந்தைகள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஆசிரியர்களும் மாணவர்குளம் நேரு பற்றிச் சிறப்புரை ஆற்றுவார்கள். ஆடல், பாடல் போன்ற பல கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். சிறுவர்கள் நேருவைப்போல் மாறுவேடப் போட்டிகளில் பங்கெடுத்துப் பரிசு பெறுவர். இனிப்பு வழங்களுடன் விழா நிறைவு பெறும்.

நாட்டு மக்களும் நேருமீது மதிப்பும், மரியாதையும் கொண்டுள்ளனர். எனவேதான் கல்வி, தொழில் நிறுவனங்கள், அரசாங்க அலுவலகங்கள், நூலகம், விளையாட்டு அரங்கம் போன்றவற்றிக்கு நேருவின் பெயர் விளங்குகின்றது. ஊர்கள், ஊரிலுள்ள தெருக்களுக்கும் நேருவின் பெயர் வைக்கப்பட்டுள்ளது. மும்பையிலுள்ள நேரு கோளரங்கமும், நேரு சயின்ஸ் சென்டரும் அறிவியல் சார்புடையவை. பார்க்கத் தகுந்தவை. சென்னையிலுள்ள நேரு விளையாட்டு அரங்கமும் பெயர் பெற்றது. மேலும் பல சிறப்புகளைச் சொல்லலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த தேசத் தலைவர் நேரு மாமாவைப் பற்றி உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவரைப்போல் நம் நாட்டு விடுதலைக்கும். வளர்ச்சிக்கும் உழைத்த தலைவர்களை மறவாது நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இன்றைய தலைவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் அளித்து, அவர்கள் செய்யும் நல்ல காரியங்களில் ஒத்துழைப்பது மக்களின் கடமையாகும்.

நன்றி! அன்புடன் உங்கள்- ரோஜா மலர்!!!!




# ஆர்.சித்தர்ராஜ் நாடார்
## குட்வில் ரியல் எஸ்டேட்
136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677
7200506699.



# JEHOVAH
GROUP OF COMPANIES



•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares
E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125

C.மதியழகன் வாழ்க வளமுடன் SGB
செல்:9789095625. **ஸ்ரீ கணேஷ் பவன்**



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.

# SUGAM HOSPITALS
*Symbol of Health*
THIRUVOTTIYUR & CHROMPET



## MULTI SPECIALITY HOSPITAL





- WORLD CLASS INTENSIVE CARE UNIT
- 24 HOURS TRAUMA AND EMERGENCY CARE
- HITECH OPERATION THEATRES

THIRUVOTTIYUR
40 50 60 70
#349, T.H.Road, Thiruvottiyur, Chennai -19.

CHROMPET
85 85 85 85 50
#107A, G.S.T. Road, Chrompet, Chennai - 44

Dr.D.B.D.Sathiakumar M.D., Dr.Sheila Sathiakumar M.B.B.S., D.H.M

OUR GROUP DIAGNOSTIC CENTERS
HIBEAM SCANS
TOTAL IMAGING
ROYAPURAM 25 95 17 57 PONNERI 27 97 34 44

---



செல்: 98405 57997, 98415 49955

# V.S.குமார் ரியல் எஸ்டேட்

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன்
கம்பெனி வாடகைக்கு அணுகவும்.
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87

---



ஸ்ரீ பொன் படைப்போர் ஐய்யனார் துணை

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

# ஸ்ரீ ஈஸ்வரி ஸ்டோர்



**அரிசி வகைகள் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.**
**இங்கு மாட்டுத் தீவனம் கிடைக்கும்.**

**உரிமை:ஆர்.கருப்புசாமி**

5/19, அனுமந்தபுரம் ரோடு, சிங்கபெருமாள் கோயில், செல்:9944926488,
9941946422, 8012694685, 9003271615.

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

**எம்.சேர்மகனி**
**கே.ஆர்.கணேசன்**

செல்:8608920033.
24711433, 48563223.

# SRI GANAPATHI STEELS

Dealer in: M.S.Flats, Square, Angler, Channels, Joists, Ms., G.I & CR Sheets, M.S & G.I Pipes,
Welding Electrodes, Polycorbinate Sheets, Rooling Sheets.,

18&20, Pillaiyar Koil Street, Jafferkhanpet, Chennai-83. E-mail:srigonapathisteels @hotmail.com

# காமராஜர் ஒரு சகாப்தம்

**வரலாற்றில் விருதுபட்டி**

ஞானம்பிள்ளை பொட்டிக்கடைப் பக்கம் வந்து, அரசியல் பேச்சைக் கேட்பதில் மெய்மறந்தான். காங்கிரஸ் இயக்கத் தொடர்பான செய்திகளைச் சுதேசமித்திரனில் படித்தறிய ஆர்வம் காட்டினான். 'ஃபஸ்டு ஃபார்ம்' அரையாண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றான். படிப்பதில் எக்குறையும் இல்லை! ஒரு நாள் உலாவச் சென்ற தாய்மாமன் கருப்பைய நாடார் கோயில் தரிசனத்திற்கு அம்மன் கோயில் பொட்டல் பக்கம் வந்தபோது, காமராஜ் அரசியல் பேச்சை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்ததைக் கண்டார்; 'நம் வீட்டுப் பிள்ளைக்கு இதெல்லாம் சரி வருமா? ஓரளவுக்கு நன்றாகப் பேசவும் படிக்கவும் எழுதவும் செய்கிறான். இனித் தொழிலில் ஈடுபடுத்திவிட வேண்டியதுதான்' என்ற முடிவுடன் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து, வியாபார அனுபவம் பெறத் தம் ஜவுளிக் கடைக்கு அனுப்பினார்.

பள்ளி சென்றபோது அணிந்த ஆங்கில பாணி உடையை மாற்றிக்கொண்டு, கறை போடாத நான்கு முழ வேட்டியும் அரைக்கைச் சட்டையும் அணிந்து ஜவுளிக் கடைக்குச் செல்லத் தொடங்கினான்.

**விடுதலை வேள்வியில் காமராஜ்**

ஜவுளிக் கடை வியாபாரத்தில் காமராஜ் நல்ல பெயர் வாங்கினான்; புதிய வாடிக்கையாளர்களைக் கவர்ந்தான்; காலையில் கோயிலுக்குச் செல்வது, மார்கழி மாதப் பஜனையில் கலந்து கொள்வது, கடைக்குச் செல்வது எனப் பழகிக் கொண்டான்; ஊர் மகமைக் கூட்டங்களில் கலந்து கொண்டு, பெரியவர்களின் வாதப் பிரதிவாதங்களைக் கவனித்தான்; கந்தசாமிப் புலவர் நடத்தி வந்த பஜனை கோஷ்டியில் சேர்ந்து, முருக பக்திப் பாடல்களைப் பாடுவதில் கவனம் செலுத்தினான்.

உடற்கட்டைப் பாதுகாக்க நண்பர்களுடன் சிலம்பக் கூடம் சென்று பயிற்சிகளில் ஈடுபட்டான். விழாக் காலங்களில் குடும்பத்தவருடன் கோயிலுக்குச் செல்வான். ஒருமுறை ஆடி அமாவாசைக்குச் சதுரகிரி சுந்தன மகாலிங்க சுவாமி கோவில் திருவிழாவுக்குச் சென்றபோது, வண்டியை விரைவாகச் செலுத்தி வெற்றி பெற்றமைக்காக முதல் பரிசும் மாலை மரியாதையும் பெற்றான். வியாபாரத்தில் காமராஜ் காட்டிய ஆர்வமும் அக்கறையும், கடைத் தெருவிலும் வீட்டிலும் மதிப்போடு மரியாதையையும் உயர்த்தின.

அப்போது முதல் உலகப் போர் தொடங்கி, அதன் விளைவுகள் இந்தியாவையும் உலகின் பிற பகுதிகளையும் பாதித்திருந்தன. பொது நடைமுறைகளில் அக்கறை செலுத்தத் தொடங்கிய காமராஜ், சில சமயங்களில் தெப்பக்குளம் கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்து, நேரம் போவது தெரியாமல் நண்பர்களுடன் விவாதங்களில் ஈடுபட்டான். யுத்தச் செய்திகள், அரசியல் நிலவரம் குறித்து விவாதித்துவிட்டு வீடு திரும்ப நள்ளிரவாகிவிடுவதும் உண்டு. டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஜார்ஜ் ஜோஸப், திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் முதலான தேச பக்தர்கள் விருதுபட்டிக்கு வந்து அரசியல் கூட்டங்கள் நடத்துவது உண்டு. அவர்கள் ஹோம் ரூல் இயக்கம் குறித்துப் பேசுவார்கள்; ஆங்கில ஆட்சிக் கொடுமைகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசுவார்கள். ஜவுளிக்கடை நடவடிக்கைகளில் கவனமாக இருந்தாலும், காமராஜ் வெளி நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டியதால், ஏதாவது காரணம் சொல்லிவிட்டுப் பத்திரிகை படிப்பதிலும் அரசியல் கூட்டங்களுக்குச் செல்வதிலும் அதிகக் கவனம் செலுத்தினான். வீட்டுப் பெரியவர்கள் திட்டமிட்டுக் காமராஜைக் கடையில் நிறுத்தித் தனிமைப்படுத்தினார்கள். அதனால் சில கூட்டங்களுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. அதனால் கூட்டம் நடைபெறும் நாள்களில் "ராத்திரிக்குக் கூட்டத்துக்குப் போகணும். நேரத்தோடு கல்லாப் பொறுப்புக்கு ஆள் அனுப்புங்க" என்று சொல்லத் தொடங்கினான். "இந்த கூட்டத்துக்கு நேரத்தோடு போகணும். மாற்று ஆள் வராவிட்டால் என்மேல் குறைபடக் கூடாது" என்று எச்சரிக்கவும் தொடங்கினான். (தொடரும்)


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!




போன்:24769290, 24766162
செல்:91760 65566.

லட்சுமி ஏஜென்சிஸ் X+
லட்சுமி டிப்போ X+

கீத்து, மூங்கில், சவுக்கு, பந்தல், கொட்டா காண்ட்ராக்ட், சிமெண்ட் ஸீட், சிமெண்ட், செங்கல், மணல், எங்களிடம் சிறந்த முறையில் கிடைக்கும்.

நெ: 80, ஆற்காடு ரோடு, போரூர், சென்னை-116.



V.முருகானந்தம்-உரிமையாளர்
தலைவர்-138வது வட்டம்
காங்கிரஸ் கமிட்டி




வீடு, மனை, வாங்க விற்க அணுகவும்,
வீடு, ஆபிஸ், கடை, குடோன், கம்பெனி வாடகைக்கு அணுகவும். 9840583539.

எண்:42, அண்ணா மெயின் ரோடு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78,9840583539.

# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

**பிற்காலச் சோழர் ஆட்சியின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட சோழர் நிலை**

மதுரை மாநகரில் நிலவிய கடைச்சங்கம், கி.பி.2ம் நூற்றாண்டின் இறுதியில் முடிவெய்தியது.

கடைச் சங்க இறுதி காலத்திற்குப் பிறகு கி.பி.9ம் நூற்றாண்டின் இடையில் தஞ்சை மாநகரைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கிய சோழன் விசயாலன் காலம் வரையில் சோழரின் செய்திகள் நன்கு புலப்படவில்லை. கி.பி.4, 5ம் நூற்றாண்டுகளில் நம் தமிழகம் களப்பிரர் என்ற ஒரு வகையாரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது பல ஆதாரங்களால் அறியக் கிடக்கின்றது. பாண்டி நாடு களப்பிரரால் கைப்பற்றப்பட்டிருந்த செய்தி வேள்விக்குடிச் செப்பேடுகளாலும் புலனாகின்றது. அந்நாட்களில் தான் சோழரும் தம் நாட்டைக் களப்பிரரிடம் இழந்திருத்தல் வேண்டும் என்பது ஒரு தலை.

முதலில் பாண்டியர் தாம் இழந்த நாட்டை மீண்டும் கைப்பற்றி தமிழகத்தின் தென்பகுதியில் தம் பேரரசை நிறுவி அதனை உயர்நிலைக்குக் கொணர்ந்து ஆட்சி புரிந்து வரலாயினர். சோழ நாட்டைக் களப்பிரிடமிருந்து கைப்பற்றி பல்லவர் தமிழகத்தின் கீழ்ப்பகுதிக்குப் பேரரசராய் விளங்கினர். பழையாறை நகரில் பல்லவர் காலத்தில் குறுநில மன்னராக சோழர் இருந்தனர் என்பது கண்டு உணரத்தக்கதாகும்.

கி.பி.8ம் நூற்றாண்டில் முதற்பகுதியில் சுந்தரமூர்த்திகள் சேரமான் பெருமாளுடன் மதுரை மாநகர்க்குச் சென்றபோது அவர்களை பாண்டிவேந்தன் ஒருவனும் அந்நகரில் முன்னரே போய்த் தங்கியிருந்த அவன் மருமகன் சோழமன்னன் ஒருவனும் எதிர்கொண்டழைக்க, எல்லோரும் சோமசுந்தரக் கடவுள் திருக்கோயிலுக்குச் சென்றார்கள் என்று பெரிய புராணம் கூறுகின்றது. அன்றியும் சுந்தரமூர்த்திகள் மதுரையும் பதிக்கு அண்மையுள்ள திருப்பரங்குன்றத்திற்குச் சென்று, அங்குத் தாம் பாடிய பதிகத்தின் இறுதிப் பாடலில் அதனைச் சேர சோழ பாண்டியர் ஆகிய மூவேந்தர் முன்னே பாடியதாகக் கூறியுள்ளனர்.

**தொகுப்பு:கீழக்கடை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன். து.அருணாசலபுரம்.**

அடிகள் குறிப்பிட்டுள்ள சேரர், சேரமான் பெருமாள் நாயனார் என்பதும், சோழன் பாண்டியன் மகளை மணந்து மதுரையில் அப்போது தங்கியிருந்த ஒரு சோழ அரச குமாரன் என்பதும், பாண்டியன் கி.பி.7ம் நூற்றாண்டின் இறுதியிலும் 8ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்த பாண்டியன் கோச்சடையான் ரணதீரன் என்பதும் ஆராய்ச்சியால் புலப்படுவதாக சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடுகிறார்.

**சோழன் விசயாலயன்**

பிற்கால சோழப் பேரரசை நிறுவ முதலில் அடிகோலியவன் கி.பி.9ம் நூற்றாண்டின் இடையில் எழுந்த விசயாலயன் என்னும் சோழ மன்னனே ஆவான். கி.பி. 846ம் ஆண்டில் பழையாறை நகரிலிருந்து விசயாலய சோழன் என்பான் முத்தரையர் மரபினனாய ஒரு குறுநில மன்னனைத் தாக்கி அவன் ஆளுகைக்குட்பட்டிருந்த தஞ்சை மாநகரைக் கைப்பற்றிக் கொண்டான்.

பல்லாண்டுகளாக தாழ்ந்த நிலையில் புகழ் குன்றிக் கிடந்த சோழ இராச்சியத்தை மீண்டும் நிறுவி அதனை உயர்நிலைக்குக் கொணர அடிகோலியவன் விசயாலய சோழனே என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் எல்லோரும் கருத்து வேறுபாடின்றி ஒப்புக்கொள்ளும் செய்தியாகும். அக்காலத்தில் சோழ மண்டலத்தில் முடி சூடி ஆட்சி புரிந்து வந்த சோழ மன்னர்கள் எல்லோரும் இராசகேசரி பரகேசரி என்ற இரு பட்டங்களையும் ஒருவர் பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்து கொண்டிருந்தனர் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. அவற்றுள் பரகேசரி என்ற பட்டம் புனைந்து அரசாண்டவன் நம் விசயாலச் சோழன் என்று தெரிகிறது.

கி.பி.854ம் ஆண்டில் பாண்டியர்க்கும் பல்லவர்க்கும் குடமூக்கில் (கும்பகோணம்) ஒரு போர் நடைபெற்றது என்பது சின்னமனூர் செப்பேடுகளால் அறியக் கிடைக்கின்றது. (தொடரும்)




N.R.N.Group

போன்:044-26790587

பிரியா டிப்போ

கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.

2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.





ஸ்ரீ கெஸ்ட் ஹவுஸ்

SHREE GUEST HOUSE

A/c & Non A/c Rooms Available. 9444683121. 9444180067.

57, East Raja Street, Mamallapuram, - 603104, Kanchipuram District.

New Happy Rewinty, 37, ஒத்தவாடை, நியர் பீச் ரோடு, 9443778291, 7338898291.

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

**மணப்பந்தலில் பிரவேசம்:-**

மணமகளின் வீட்டை அடைந்ததும் மணமகளின் மூத்த சகோதரன் மணமகனை சந்தன புஷ்ப தாம்பூலத்துடன் எதிர் கொண்டழைத்து மணப்பந்தலினுள் அமைக்கப்பட்டிருக்கும் அரியாசனத்தில் அமர்த்துகிறான். கோஷா முறை பின்பற்றாத குடும்பங்களில் பெண்ணின் சகோதரி மணமகன் எதிரில் கைவிளக்குடன் வந்து தனது குடும்ப ஜோதி வருவதாகப் பாவித்து அவனை அழைத்து வந்து ஆசனத்தில் அமரச் செய்வாள். அத்துடன் அவனருகில் ஒரு வாடா விளக்கையும் ஏற்றி வைப்பாள். இதற்காக அவளுக்கு மணமகனால் சன்மானங்கள் தரப்படுவதுண்டு. இனிதான் முறையான திருமணச் சடங்குகள் தொடங்குகின்றன

**மாமன் பட்டங்கட்டுதல்:-**

பிராமணர் திருமணத்தைப் போலவே நாடார் திருமணத்திலும் தாய் மாமனுக்கு விசேஷ பங்குண்டு. பிராமணர் திருமணத்தில் மணப்பெண்ணும், மாப்பிள்ளையும் மாலைமாற்றிக் கொள்ளும் சடங்கில், அவரவர் தாய்மாமன் தோளில் சவாரி செய்தவாறு திருமணத்தம்பதிகள் மாலை மாற்றிக் கொள்கிறார்கள். தமிழில் "மா" என்ற பதத்திற்கு பெரிய என்ற அர்த்தமும், குதிரை என்ற அர்த்தமும் உண்டு மாமாவை பெரிய குதிரையாக்கி சவாரி செய்தவாறு மாலை மாற்றிக் கொள்கிறார்கள்

நாடார் திருமணத்தில் வரனுக்குத் தாய் மாமன் கையினால் பட்டங்கட்டுதல் என்ற சடங்கை நிறைவேற்றி வரனை அவனது குடும்ப இராட்சியத் தலைவனாக முடி சூட்டும் சம்பிரதாயம் நடைபெறுகிறது. மாப்பிள்ளை மணக்கோலத்துடன் பெண் வீட்டுக்கு புறப்படுவதனால் வரன் வீட்டிலேயே வைத்து அவனுக்கு மாமன் கையினால் பட்டுத் தலைப்பாகை கட்டி ஆசீர்வாதம் செய்கிறான். சகோதரி மகனுக்கு தலைமைப் பட்டம் அல்லது முடிசூட்டும் பொறுப்பு தாய்மாமனுக்கே உரியதாகும். மாமன் குடும்பத்தாருடன் எவ்வித மனத்தாங்கல் அல்லது பிணக்கு இருந்த போதிலும் அவைகளே சமாதானப்படுத்தி மாமனை திருமணத்திற்கு அழைப்பதற்கு இது ஒரு முக்கிய சந்தர்ப்பம். இந்து மதச் சட்டத்தில் ஒருவனுக்கு தாய்க்குப் பின் தாய் மாமனே கார்ட்டியனாகும் தகுதி பெற்றிருக்கிறான் என்பது இங்கு கவனிக்கத்தக்கது

திருமணத்திற்கு தாய் மாமன் பிரசன்னமாயிருக்கும் சந்தர்ப்பம் இல்லாவிட்டால், தேங்காய் ஒன்றை தாய் மாமனாக ஆவகனப்படுத்தி அதனை தாய் மாமன் ஸ்தானத்தில் வைத்து மாமன் சடங்கை முடிப்பது நியதி. இக்காலத்தில் தாய் மாமனுக்குரிய ஸ்தானத்தில் வேறு வழியில் உள்ள மாமன்மார்களையோ தாய்மாமன் வழி வரனிலும் வயது குறைந்த சின்னஞ்சிறு பையன்களையோ கூட வைத்து மாமன் சடங்கு செய்கிறார்கள். இது சரியான மரபு அல்ல

மேற்கண்டபடி மாமனால் பட்டங்கட்டிய பின்னரே ஒருவன் முழு மனிதனாகிறான். அதன் பின்னரே அவன் ஒருத்திக்கு நாயகனாகும் தகுதியையும் அடைகிறான் என்பது கொள்கை. கிராமாந்தரங்களில் "தலைக்கட்டுவரி" என்று பொதுக் காரியங்களுக்காக திருமணம் ஆனவர்களுக்கு முழு வரி விதிப்பதுண்டு. தலையில் தலைப்பாகை அல்லது உறுமால் கட்டும் தகுதி திருமணம் ஆனவர்களுக்கே கொடுக்கப்படுகிறது என்பதை இது விளக்குகிறது. இனி வயதுக்கு வராத ஒரு சிறுவனின் தந்தை இறந்து விட்டால் தந்தையின் குடும்ப முதன்மைப் பட்டத்தை கருமாதி நாளில் தனயனுக்கு தாய் மாமன் கையினால் தலைப்பாகை கட்டுவித்து சிறுவனை குடும்ப முதல்வனாக்கும் தகுதி தாய் மாமனுக்கும் இருப்பது இங்கு கவனிக்கத் தக்கது. இவ்வாறு தாய்மாமனால் தலைமைப்பட்டம் கட்டியது முதல் அச்சிறுவனுக்குக் குடும்பத் தலைவனாக முழுவரி விதிக்கப்படுகிறது என்பதும் நோக்கற்பாலது

நோயுற்றிருந்த மகனுக்கும், மக்களுக்கும் எண்ணெய் வைக்கப்பட வேண்டிய நாளில், தாய் கையினால் எண்ணெய் வைத்தால் தோஷம் ஏற்படாது என்பது சரீர நோய் வல்லாரும், வைத்திய சோதிடரும் கூறுவார்கள். ஏனெனில், தாயை ஒத்த அவளது சகோதரன் கைக்கும் அத்தகைய சக்தி உண்டு. அதே போன்று பெண்ணிற்கும் திருமணத்தின் பின் தாய்மாமன் கையினால் விபூதி, திலகம், அர்ச்சதையிட்டு ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி முறையும் கடமைப்பாடாக இருக்கிறது

மணமகன் இல்லத்திற்கு புறப்படுமுன் மாமன் சடங்கு முடித்துக் கொள்ளாமல் இருந்தால், மணப் பந்தலிலாவது வரனுக்கு மாமன் சடங்கு முடித்துக் கொண்ட பிறகுதான் மற்ற சடங்குகள் தொடங்க வேண்டும். ஒரு வரன் மாமன் சடங்குகளை முடிக்காமலே பெண் வீட்டிற்கு வருவதாக வைத்துக் கொண்டு அங்கு நடக்கக்கூடிய திருமணச்சடங்குகளை கூறத் தொடங்குவோம்.

**மணமேடை அல்லது மணவறை:-**

சில நாடார் பெருங் குடும்பங்களில் சாசுவதமாக குடும்ப மணமேடைகள் அமைக்கப்படுவதுண்டு. அவ்வாறில்லாத இடங்களில் கன்னிக்கால் நாட்டிய நேரந்தொடங்கி மணமேடையை அமைத்து முடிப்பர். திருமணத்திற்கு முன்னதாக மணமேடை புஷ்பங்களாலும் மலைகளாலும் அலங்கரிக்கப்படுகின்றன

உற்றார் உறவினர் சுற்றம் சூழ ஆடவரும் பெண்டிரும் ஆடை அணிகளால் தம்மை அலங்கரித்துக் கொண்டு மணமேடையைச் சுற்றிலும் வந்து அமர்ந்து கொள்வார்கள்

அலங்கரிக்கப்பட்ட மணமேடையில் ஒவ்வொரு கணமும் என்ன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதைக் கட்டியம் கூறுவதற்காக நாடார் குடிமகன் எனும் நாவிதன் தயாராகக் காத்திருப்பான். முதலாவது வரனின் தாய்மாமன் திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர் அல்லது குருவினால் மேடைக்கு அழைக்கப்படுகிறார்.

**மாமன் சடங்கு:-**

மாமன் வந்தமர்ந்ததும் கட்டியக்காரகுடிமகன் "ஐயா மாமன் சடங்கு ஆரம்பிக்கிறார்கள்" என்று சம்பிரதாய முறைப்படி (ஆனால் மைக்ரோபோன் இல்லாமல்) உரத்த குரலில் அறிவிக்கிறான். (பின்னர் மாமனாருக்கு ரட்சை அல்லது கஞ்சணம் கட்டப்படுகிறது) அவர் மருமகனுக்குப் பட்டங்கட்டி அவனை குடும்ப முதல்வனாகவும், மணப்பெண்ணுக்கு நாயகனாகவும் ஆக்குவதற்கான கைங்கரியத்தை தாம் செய்து முடிப்பதாக கங்கணம் கட்டிக் கொள்கிறேன் என்று சங்கற்பம் செய்து கொண்ட பின் மணமேடையிலுள்ள விநாயகருக்கும், கும்பங்களுக்கும் பூஜைகள் கற்பூர ஆரத்திகள் நடைபெறுகின்றன. கட்டியக்காரன் "ஐயா மாமன் பூஜை நடக்கிறது" என அறிவிக்கிறான்.

மாமன் பூஜை முடிந்ததும் அவர் மேடையினின்றும் இறங்கி தனித்த ஒரு ஆசனத்தில் அமருகிறார். இதனைத் தொடர்ந்து வரன் மணமேடை ஏறி கிழக்கு நோக்கி அமருகிறான். மாப்பிள்ளைத் தோழன் அவனது அருகில் நின்று பெரியோர்கள் குறிப்பையும் புரோகிதர் சொல்வதையும் தெரிந்து கவனித்து அவ்வப்போது என்ன செய்து வர வேண்டுமென்று அவனுக்கு உணர்த்துகிறான்.

- தொடரும்........


Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.
SRI LAKSHMI ENTERPRISES
Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works
28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.




சென்னை டான்போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி & நக்கீரர் தமிழ் சங்கம் இணைந்து நடத்திய தமிழரின் வணிகத் தடங்கள் தேசிய கருத்தரங்கி வாழ்நாள் சாதனையாளர் விருதினை வி.ஜி.சந்தோஷம் அவர்களுக்கு நக்கீர தமிழ் சங்கத் தலைவர் பாஸ்கரன், கல்லூரியின் அதிபர் டாக்டர் சிவி.ராஜரத்தினம் இணைந்து வழங்கினர். அருகில் திருமிகு இனியவன், கவிஞர் தமிழன் ராகுல் காந்தி உள்பட பல உள்ளனர்.


நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான

**நாடார் விவாகம் திருமணத் தகவலகம்**



36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202
செல்:9176051116, 9360539833. 04639-282222. 04639 296108.
nadar vivahammatrimony / www.nadarvivaham.in/ Google Play
புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.30 மாலை 3.00 -6.00 ஞாயிறு விடுமுறை.
இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.

**தென்றல் திருமணத் தகவலகம்**

பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.
முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,





மரந்தலை மாடசாமி துணை

செல்:9840685266, 9380879313.



**MARS**

**மார்ஸ் திருமண தகவல் மையம்**

சென்னையில் 30 வருடமாக பெரும் தொழில் அதிபர்கள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், அனைவருக்கும் நிறைய திருமணங்கள் நடத்தி கொடுத்தவர் இந்து நாடார், கிறிஸ்துவ நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் அனைத்து மாவட்ட நாடார்கள் தொடர்புகொள்ளவும். **வேம்பார் கனகராஜ் நாடார்.**

**வீடு, மனை, தோட்டம் வாங்க விற்க அணுகவும்.**

நெ.25, நேதாஜி தெரு, அன்னை இந்திரா நகர், மூலச்சத்திரம், சென்னை-51,





அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.



**சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்**

286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

**செல்வராஜ் சூப்பர் மார்கெட்**

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.
எம்.கோவிந்தராஜ். செல்:9384605133



**மருத்துவம்**

"நல்ல வைத்தியன் நோயைக் குணப்படுத்தும் முன், 'அந்த நோய் வருவதற்கு எது காரணம்?' எனக் கண்டறிந்து, 'எந்த மருந்து கொடுத்தால் அந்த நோய் நீங்கும்?' என்பதையும் தெரிந்து கொண்டு வைத்தியம் செய்ய வேண்டும்" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இத்துடன் நிறுத்திவிடவில்லை திருவள்ளுவர். மேலும் மேலும் சாப்பிட்டுக் கொண்டிருப்பது, பல நோய்களுக்குக் காரணமாகும். 'குற்றமில்லாத உணவையும், சுத்தமான உணவையும் ஜீரணித்த பின் சாப்பிட்டால், மருந்தே தேவையில்லை' என்று கூறுகிறார்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

மருத்துவமல்லாத, வேறு துறையில் டாக்டரான முன்னாள் ஜனாதிபதி "டாக்டர் அப்துல் கலாம்", மருத்துவர்களுக்கு ஐந்து பண்புகள் இருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார்.

தயாளம், நீதி, சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, புத்திசாலித்தனம்.

**கல்வி** "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை"

திருக்குறளில் திருவள்ளுவர் கல்வியின் சிறப்பைப் பற்றிச் சொல்லும்போது, "ஒருவனுக்கு அழிவில்லாத மேலான செல்வம் கல்வியே. அக்கல்வியைத் தவிர பிற செல்வங்கள் அனைத்தும், செல்வங்கள் அல்ல" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

மேலும், "கற்றவனுக்கு எதுவாயினும், தனது நாடாகும்; ஊராகும்" என்று திருவள்ளுவர் கூறியது மிகவும் உண்மை. நாங்கள் சென்னையிலிருந்து அமெரிக்காவிற்குச் சென்றோம். அங்கு குறிப்பாக, டெக்சாஸ் மாநிலத்திலுள்ள சான் அன்டோனியோவில் கிட்டத்தட்ட 100 நாட்கள் தங்கி, அந்நாட்டு மக்களோடு பழகி, இந்தியாவிலுள்ள ஆந்திரா, கர்நாடகா, கேரளா, குஜராத் மாநில மக்களோடு இரண்டறக் கலந்தும், அங்குள்ள விற்பனை மையங்களில் பொருட்களை வாங்கி, உணவகங்களில் உணவு உண்டும் வந்தோம். நான், 'சென்னையில் இருப்பதுபோல்' உணர்ந்தேன். சென்னைக்கும், அமெரிக்காவிற்கும் எந்த வித்தியாசமும் எனக்குத் தெரியவில்லை. காரணம், கல்வி. குறிப்பாக, உலக மொழியான ஆங்கிலத்தை நன்கு அறிந்திருந்தது தான். அதுமட்டுமின்றி, எனது மகன்கள் இருவரும், படித்து, அமெரிக்காவில் வேலை செய்வதால்தானே, எங்களுக்கும் அங்கு செல்ல வாய்ப்பு கிடைத்தது.

இங்குள்ள மக்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். முதலில் எனக்குக் கொஞ்சம் வித்தியாசமாகத் தெரிந்தது. எங்குப் போனாலும், ஆங்கிலத்தில் விளம்பரத்தைப் பார்க்கலாம். விமான நிலையமானாலும், ரயில் நிலையமானாலும், பஸ் நிலையமானாலும் எங்கும் ஆங்கிலம், எதிலும் ஆங்கிலம். எனவே, எங்களுக்குக் கஷ்டமாகத் தெரியவில்லை.



தமிழகத்தில், 'இரண்டு மொழிக் கொள்கை', அதாவது, தாய்மொழியாம் தமிழும், உலக மொழியான ஆங்கிலமும்.

ரஷ்யா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில், "ஆரம்பப் பாடசாலையிலிருந்து, கல்லூரி வரை அவரவர் தாய்மொழியில் படிக்கிறார்கள்" என்று கேள்விப்பட்டேன். உலகத்திலேயே அதிக சம்பளம் வாங்குபவர்கள் சாஃப்ட்வேர் என்ஜினியர்கள் தான். இவர்கள் எல்லோரும் ஆங்கிலத்தை போதனா மொழியாகப் படித்தவர்கள்.

அமெரிக்காவில், பல நாட்டு மக்கள் வாழ்கிறார்கள். பலவித தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இங்கு வேலை செய்யும் சாஃப்ட்வேர் என்ஜினியர்கள் எல்லோரும் இந்தியர்களே. குறிப்பாக, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள்தான்.

அமெரிக்காவில், தங்கள் குழந்தைகளின் கல்விக்காகப் பெற்றோர்கள் அதிகம் செலவு செய்கிறார்கள். மாணவர்களுக்கு பல உதவிகளை, அரசும் செய்து கொடுக்கிறது. இங்கு 6 வயதில்தான் ஒன்றாவது வகுப்பில் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். ஆனால், மூன்றரை வயதில் கிண்டர் கார்டன் வகுப்புகளில் சேர்த்து விடுகின்றனர். இங்கு மாணவர்கள் சீருடை அணிந்து பள்ளிக்குச் செல்லவில்லை.

இங்கும், அரசு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. தனியார் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. தமிழ்நாட்டைப் போன்று, தனியார் கல்வி நிலையங்களில் அதிகப் பணம் வசூல் செய்கிறார்கள். கிண்டர் கார்டன் வகுப்பிற்கு வருடத்திற்கு 700 டாலருக்குக் குறையாமல் வசூலிக்கின்றனர். சர்ச்சுடன் இணைந்து நர்சரி பள்ளிகள் மற்றும் கிண்டர் கார்டன் பள்ளிகளை நடத்துகிறார்கள். மாண்டிசோரி முறை கல்வி கற்பிக்கும் கல்வி நிறுவனங்களும், Earth School-ம் இங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இங்குள்ள "டெக்சாஸ் பல்கலைக் கழகம்" உலகப் புகழ் பெற்றது.

போனிங்ஸ் பல்கலைக் கழகம், கிறிஸ்டியன் பல்கலைக் கழகம், WAY NE STATE University சான் அன்டோனியோவில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல நாட்டு மக்கள் இங்கு படிக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து மட்டும், 100000 மாணவர்கள் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் படிக்கிறார்கள் என்பது செய்தி. இங்கு என்ஜினியரிங் கல்லூரி, சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், 'è™ÖKèœ' â¡Á Ü¬öŠðF™¬ô. 'School of Science and Technology'â¡ø ªðò¼ìÂ‹, 'School of Law' ñŸÁ‹ 'School of Medicine'என்ற பெயருடனும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

என்ஜினியரிங் பாடத்தில் பல பிரிவுகள் இருப்பது போன்று, சட்டம், மருத்துவம், பயோடெக்னாலஜி, நுண்கலை, கலை இவற்றிலும் பல பிரிவுகள் இருக்கின்றன. சிறப்புப் பயிற்சிகள் கொடுக்கும் கல்வி நிறுவனங்களும் இருக்கின்றன.

இங்கு மருத்துவத்தில் Ph.D படிக்க உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்துள்ளனர். அரசு கணிசமான ஒரு தொகையை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமாக, மாதா மாதம் கொடுத்து உதவுகிறது. இதனால் உலகம் முழுவதுமுள்ள மாணவர்களின் கவனம், இதன்பால் ஈர்க்கப்படுகிறது. "அட்மிஷன் மட்டும் கிடைத்தால் போதும்" என்று மாணவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், பட்டம் பெற்று, தங்கள் நாடு திரும்புபவர்கள், சிலர்தான். பலர், இங்கேயே தங்கிவிடுகின்றனர்.

கேரள மாநிலத்திலிருந்து கல்வித் துறையில் பணிபுரிந்து, ஓய்வு பெற்ற, 'ஜார்ஜ்' என்பவரைத் தற்செயலாகப் பார்க்க நேரிட்டது. அவர் "எனது மகள் இங்கு M.S மருத்துவம் படிக்கிறாள். அவளுக்கு உதவியாக இருப்பதற்காகத்தான், கேரளாவிலிருந்து வந்துள்ளேன்" என்று குறிப்பிட்டார். பிறகு, தனது மருமகன், மற்றுமொரு பல்கலைக் கழகத்தில் M.S மருத்துவம் படிப்பதாகவும், மற்றொரு மகள், TCS கம்பெனியில் சாஃப்ட்வேர் என்ஜினியராக சான் அன்டோனியோவில் வேலை செய்வதாகவும் குறிப்பிட்டார். அவர் ஐந்தாவது தடவை இங்கு வந்திருப்பதாகக் குறிப்பிட்டார். நானும் அவரும் பல மணி நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

போனிக்ஸ் பல்கலைக்கழகத்தில் MHA முதுநிலைப் பட்டப் படிப்பில் மாணவர்களைச் சேர்த்து, படிக்க வைக்கிறார்கள். விபிகி என்றால் 'Master of Hospital Administration'. இது மருத்துவமனை நிர்வாகத்தில், முதுகலைப் பட்டம் என்றுதான் எல்லோரும் நினைப்பார்கள். ஆனால், அதனைப் படித்துப் பார்த்தால் அது அல்ல.

"தொழிற்சாலைகள் சரியாக இயங்கவில்லை என்றால், இதைச் சரிசெய்ய ஆரோக்கியமான நிர்வாகிகள் தேவை" என்று குறிப்பிட்டு "MHA சேர்ந்து படித்து, பயன்பெறவும்" என விளம்பரம் பஸ் ஸ்டாப்பில் எழுதிப் போட்டிருந்தனர்.

இங்கு மூன்றரை வயதில் தான் Pre-Kinder Garten வகுப்புகளில் மாணவர்களுக்கு அட்மிஷன் கொடுக்கிறார்கள். அட்மிஷன் நேரத்தில், கீழ்க்குறிப்பிட்ட சான்றிதழ்களைக் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். 1.Varicella / Chicken Pox, 2. Hapatities Vaccini.

மேற்குறிப்பிட்ட சான்றிதழ்கள் கொடுக்கவில்லை என்றால், அட்மிஷன் மறுக்கப்படுகிறது.

இங்குள்ள கல்வியாண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கி, மே மாதம் தான் முடிவடைகிறது.




## 38வது ஆண்டு விழா காணும் சைதை நாடார் சங்கத்திற்கு வாழ்த்துக்கள்!

பற்றும் பாசமுங் கொண்டுள்ள பண்புநிறை சகோதரர் திரு.ஜூலியன் அவர்களுக்கு,



வி.ஜி.சந்தோசத்தின் அன்பான வாழ்த்துக்களும் வணக்கமும்!

நாடார் சமூகத்திற்கென்று தனியொரு சிறப்பு தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியத் துணைக் கண்ட அளவிலும். ஏன், உலகளவிலும் கூட இருந்து வந்து கொண்டிருப்பதனைப் பல்லோரும் அறிவர்!

தளராத அவர்கள் சமூகத்தினரின் ஒற்றுமை, பாராட்டினைப் பெற்றுள்ளது! ஓயாத அவர்களது உழைப்பு, பொது மக்களின் நலன்களை மேம்படச் செய்துள்ளது! வணிகங்கடந்த அவர்களது மனிதாபிமானமும் நேர்மைக் கூறுகளும் கொடைப்பண்பும் எண்ணற்றோரை ஈர்த்துள்ளன! அவர்கள் உருவாக்கியுள்ள மரபார்ந்த சங்கங்கள் சமூகச் சேவைகளில் சிறந்து விளங்கி வருதலினை, எண்ணற்றோர் போற்றிக் களித்த வண்ணம் இருந்து வருகின்றனர்.

அவ்வகையில், பன்னிரு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள "இந்திய நாடார் முரசு" என்னும் இச்சமுதாய பல்சுவை மாத இதழ், வரும் 5.11.2023 அன்று சென்னை சைதை நாடார் ஆண்டு விழாவினையொட்டி ஒரு சிறப்பு மலராக மலரவிருப்பது அறிந்து பேருவகை கொள்கிறேன்! மலரவிருக்கும் மலர், சமூக நலம் பேணும் தனிப்பெரும் கருத்துக் கருவூலகமாக அமைந்து, திக்கெட்டும் மணம் பரப்பிட உளப்பூர்வமாக வாழ்த்துகிறேன்!

அவர்களது சங்க அறச் செயல்கள் யாவும் செழித்தோங்கட்டும்! சங்கப் பெருமக்கள் யாவரும் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்!!!

டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் விஜிபி உலகத் தமிழ் சங்கம்.

# தமிழக நாடார் மேட்ரிமொனி

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

SINCE 2007

தாங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தாங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை, கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.
USA, UK, Canada, Singapore, Malaysia, Australia, Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost) BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில் அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம், 17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது.
திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

**Cell : 73388 12126, 73977 76595**

E-mail : tamilagamatrimony2005@gmail.com

தமிழ்நாடு அரசால் 1993ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கல்வி வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு ஆகியவற்றின் மூலம் பெண்கள் சமூக பொருளாதார ஆற்றல் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கோடு நிறுவப்பட்டது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக்குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி நிதி இணைப்புகளையும் தொழில் முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் அதிகரித்து, சுய உதவிக்குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை அர்பணித்துக் கொண்டுள்ளது. ஏராளமான பெண்களை தொழில் முனைவோராக ஆக்கி வருகிறது.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 2012-13ம் ஆண்டிலிருந்து மாநிலம் முழுவதும் 31 மாவட்டங்களில் 265 வட்டாரங்களில் 8232 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழை மக்களைக் கண்டறிந்து, அவர்களை சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைந்து அவர்களுக்கான நிலைத்த தன்மையுடைய அமைப்புகளை உருவாக்கி பல்வேறு திறன் பயிற்சிகள் மூலம் வலுப்படுத்தி இலாபம் தரக்கூடிய சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதன் மூலம் அவர்களது வாழ்வாதார நிலையை உயர்த்தி, வறுமையை ஒழிப்பதே இவ்வியக்கத்தின் குறிக்கோளாகும். இன்று கிராமங்களில் பெண்கள் வசதியோடு வாழ காரணம் சுய உதவிக்குழுக்களாகும்.

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இலக்கு மக்களை உள்ளடக்கி ஒரு சுய சார்பு அமைப்பாகவும், கிராம அளவில் இயக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கும், முழு பொறுப்பு ஏற்பதோடு கிராம சபைக்கு விளக்கம் அளிக்க கூடிய அமைப்பாகவும் திகழ்கிறது. இந்த அமைப்புகள் சமுதாயத்திற்கும், திட்டத்திற்கு இடையே மிக முக்கிய இணைப்பாக செயல்படுகிறது. இதனால் பெண்கள் கிராமங்களில் சொத்துக்களை வாங்குகின்றனர். படிப்படியாக வறுமை ஒழிகிறது. அனைத்து மக்கள் வசதியுடன் வாழும் காலம் நெருங்கி வருகிறது.

**சுய உதவிக்குழுக்கள்**

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 50 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுக்களின் முடிவிற்கேற்ப உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் தங்களுக்குள்ளேயே கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துவதே சுய உதவிக்குழுக்களின் முக்கிய நோக்கமாகும். ஆண்களும் சுய உதவிக்குழுக்கள் தொடங்கி வருகின்றனர். பல தொழில்கள் உருவாகி வருகின்றன.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு**

சுய உதவிக்குழு இயக்கத்தினை வலுப்படுத்திடவும், நிலைத்த தன்மையினை அடையச் செய்திடவும், கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக்குழுக்களையும் ஒருங்கிணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1974ன் கீழ் சங்கமாகப் பதிவு செய்யப்படுகின்றன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொதுவான மையமாக அமைந்துள்ளன. சிறுதொழில் தொடங்கி பின் பெரிய தொழில் தொடங்கி முன்னேறுகின்றனர். நல்ல லாபம் ஈட்டி மாவட்ட தொழில் மையம், இதர நிதி நிறுவனங்கள் மூலம் பெரிய தொழில்களை தொடங்கிட கடன் பெற்று வருகின்றனர்.

**நிதி உள்ளாக்கம்**

முதல் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி/ஆதார நிதி ஆகியவை வழங்கப்படுகிறது. இதன் மூலம் குழுக்கள் தங்களின் மொத்த நிதியை அதிகரித்துக் கொள்ளவும் மற்றும் நிதி மேலாண்மைத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் ஒழுக்கத்தினையும் உருவாக்குகிறது. சுழல் நிதியை சரியான முறையில் பயன்படுத்துவதின் மூலம் சுய உதவிக்குழுக்கள் வங்கிகளிடமிருந்து கடன் பெறும் நம்பகத்தன்மையை அடைகிறது. 100% கடனை திரும்பி செலுத்துகின்றனர். எனவே மேலும் கடன் பெறுகின்றனர்.

(தொடரும்)




**S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A**

Correspondent

**Koilpillai Mat.Hr.sec.School**

65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.

Ph:044-22492489. 22492286, Cell:9840715246.

Email:samuelathisayaraj@gmail.com



**REVATHI LABEL PRINTERS**

R.DHEVI 98414 41111, 99415 51111

Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumar Lables & Software Support.

2/645, Habeeba Street, Chinna Neelangarai, Chennai-115.

Emaill: dhevi_rlp@yahoo.co.in

# இலக்கியச் செல்வர் குமரி அனந்தனின் பயணங்கள்

**தமிழ்க் காவியமாய் குமரி அனந்தன்**

வை.ஜவஹர் ஆறுமுகம்
9442949655



1967-ல் மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்திருந்தால் குமரி அனந்தன் அமைச்சராகியிருப்பார். அரசியலிலும் எம்.ஏ பட்டம் பெற்ற குமரி அனந்தன் மேடைப் பேச்சில் நிகரற்றவர். மிகச் சிறந்த எழுத்தாளர் தமிழ் இலக்கியவாதி. 1967க்குப் பிறகு தமிழக காங்கிரஸ் கட்சிக்கு இருண்ட காலம். அகில இந்திய காங்கிரஸ் தலைவராக காமராஜர் இந்திய அரசியலை வழிநடத்திக் கொண்டிருந்த காலத்தில் "குட்டி காமராஜ்" என்று அழைக்கப்பட்ட குமரி அனந்தனே தமிழகம் முழுவதும் வலம் வந்து கட்சியை வளர்த்தார். குமரி அனந்தன் செல்லாத நகரங்கள் கிராமங்கள் தமிழகத்தில் இருக்காது.

காமராஜ் தமிழக அரசியலுக்குத் திரும்பியபோது டெல்லியில் இந்திரா காந்தி வலிமையான பிரதமர். அவசர நிலைமை அறிவிக்கப்பட்டது. கடுமையான கட்டுப்பாடுகள். எம்.ஜி.ஆர் திமுகவிலிருந்து விலகி தனிக்கட்சி துவங்கினார். தி.மு.கவுக்கு எதிரான சூழல் காங்கிரசுக்கு ஆதரவாக மாறாமல் எம்.ஜி.ஆரின் அதிமுகவுக்கு ஆதரவாகத் திரும்பியது. இப்போது காமராஜருக்கு தி.மு.க, அ.தி.மு.க என இரண்டு அரசியல் எதிரிகள்.

1969முதல் காமராஜரின் சுற்றுப் பயணம் துவங்கியது. அதன் பிரதான தளபதியாக குமரி அனந்தன். நானும் அந்த சுற்றுப் பயணங்களில் நிருபராகப் பங்கேற்றேன். காமராஜ் பேசும் கூட்டங்களில் துவக்கத்தில் பலரும் பேசுவார்கள். அவர்களில் கடைசியாக குமரி அநந்தன் பேசுவார். குமரி அனந்தனின் பேச்சுக்கு பலத்த கை தட்டலுக்கு ஆரவாரமும் இருக்கும். இறுதியாக காமராஜ் பேசுவார்.

"இங்கே நம் கட்சியின் செயலாளர் குமரி அனந்தன் பேசினார். அவர் ரொம்பப் படிச்சவர். அழகாகத் தமிழ்ப் பேசத் தெரிந்தவர். அவரைப் போலப் பேச எனக்குத் தெரியாது..." என்று காமராஜ் பேசத் துவங்குவார். குமரி அனந்தன் மீது காமராஜ் பேரன்பு கொண்டிருந்தார்.



தமிழ்நாடு காங்கிரஸ் அப்போது புனரமைக்கப்பட்டு இருந்தது. தலைவராக பா.ராமச்சந்திரன், செயலாளர்களான குமரி அனந்தன், நெடுமாறன், தண்டாயுதபாணி, குடந்தை ராமலிங்கம் போன்ற துடிப்பான இளைஞர்கள்.

என்னைத் திருச்சியில் இந்து சேலம் நிருபராக மாற்றி இருந்தார்கள்.

அங்கே குமரி அனந்தனை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. சேலம் விவேகானந்தா போட்டோ ஸ்டியோவுக்குப் போய் நானும் குமரி அனந்தனும் படம் எடுத்துக் கொண்டோம்.

சேலம் 5 ரோட்டில் உள்ள துவாரகா ஓட்டலில் தேசிய சிந்தனையாளர் பேரவைக் கூட்டம் நடந்தது. ஜெயகாந்தன், கண்ணதாசன், தீபம் நா.பார்த்தசாரதி, சின்ன அண்ணாமலை, திருக்குறள் முனுசாமி, கவி.கா.மு.ஷெரிப், தஞ்சைவாணன், குமரி அனந்தன் எனப் பல தேசியத் தமிழறிஞர்கள் பங்கேற்றனர்.

அந்தக் கூட்டத்தில் ஒரு குழப்பம். ஜெயகாந்தன் பேசும் போது காங்கிரஸ் வீழ்ச்சிக்கு தி.மு.க மட்டும் காரணம் அல்ல. காங்கிரஸ்காரர்கள் காந்தியத்தை மறந்துவிட்டனர். குறை எங்கே இருக்கிறது என்று தேட வேண்டும். காங்கிரஸ்காரர்கள் சுய பரிசோதனை செய்து கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பங்கேற்ற காங்கிரஸ் ஊழியர்கள் கோபத்துடன் கூச்சலிட்டு ஜெயகாந்தன் பேசுவதைத் தடுத்தனர். பேசாதே உட்கார் என சப்தம். உடனே காமராஜ் எழுந்து "சும்மா இருக்கன்னேன். நான் தான் ஜெயகாந்தனை அழைத்தேன். நம்ம கட்சி மேலே உள்ள அக்கறையில் தான் இப்படிப் பேசுகிறார். அது சரிதான்னேன். அவர் நம்ம கட்சி உறுப்பினர் இல்லே. சுதந்திரமான எழுத்தாளர். நாம்தான் திருந்தணும். அவர் பேசட்டும்" என்று கூறி மீண்டும் ஜெயகாந்தனைப் பேசவைத்தார்.

சேலத்தில் நடைபெற்ற பல நெசவாளர், விவசாயிகள் போராட்டங்களை வழிநடத்தியவர் குமரி அனந்தன். சேலத்தில் ராமசாமி உடையார் (தமிழ்நாடு காங்கிரஸ் பொருளாளர்.) முக்கியமான காங்கிரஸ் தலைவர். எம்.எல்.ஏக்களையும், எம்.பிக்களையும் உருவாக்கியவர். அவர் ஒரு சமயம் என்னை அழைத்தார்.

ராமசாமி உடையார் பெரும் செல்வந்தர். ஏற்காட்டில் காபி தோட்டங்கள், ஹோட்டல், பல பஸ் கம்பெனி, பெட்ரோல் பங்க் என அவருக்கு இருக்கிறது. அந்தப் பெரிய மனிதரைச் சந்தித்தேன். காரில் ஏறச் சொன்னார். பின் இருக்கையில் அவருக்கு அருகில் அமர்ந்தேன். சேலத்தைத் தாண்டி கார் ஓமலூர் சாலையில் ஓடியது. அவர் பேசத் துவங்கினார்.

**S.பால்பாண்டியன் ஹார்டுவேர்ஸ்**
**S.பால்பாண்டியன் டிப்போ**



சிமெண்ட், செங்கல், ஜல்லி, கம்பி, பெயிண்ட் வகைகள், பி.வி.சி.பைப் வகைகள் கடப்பாக்கல், ஸிங்க் முதலியன மொத்தமாகவும் சில்லரையாகவும், தரமாகவும் கிடைக்கும்.



உரிமையாளர்: Lion S.பால்பாண்டியன்

20, புகழேந்தி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78. போன்:24713885, 23716122.

# அருமை அண்ணாச்சி



கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் வி.ஜி.பி.குழுமம்.

**பிரிந்தவர்கள் கூடினோம்:**

அம்மாவிற்கும் அது தான் சரி என்று பட்டது. உடனே எங்களுக்குச் சொந்தமாக இருந்த வீட்டை ரூ.800 க்கு விற்றோம். உள்ளூரில் தரவேண்டிய கடன் பாக்கிகளைக் கொடுத்துவிட்டு உடனே நாங்களும் சென்னைக்குப் புறப்பட்டோம்.

சென்னையைப் பார்த்ததும் எனக்குப் பிரமிப்பு ஏற்பட்டது. மாட்டு வண்டிகளை ஓட்டிச் செல்லும் பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்த நான் பேருந்து வண்டிகளும், மின் வண்டிகளும் விரைந்து செல்வதைப் பார்த்து வியப்படைந்தேன். ஏதோ, சொர்க்கத்திற்கே வந்துவிட்டது போன்ற உணர்வு தான் அப்போது எனக்கு ஏற்பட்டது. மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன்.

இனிய நண்பனே, பொதுவாகப் பட்டிக்காட்டிலிருந்து பட்டணத்திற்கு வருபவர்கள் பல ஆசைக் கனவுகளை மனதில் சுமந்து கொண்டு தான் வருவார்கள். நானும் அப்படித்தான். என் மனத்திலும் பல கனவுகள் கருக்கொண்டிருந்தன. ஆனால் என் மனத்தின் இனிய கனவுகள் வித்தியாசமானவை. நான் என்னென்ன கனவுகளெல்லாம் கண்டேன் தெரியுமா? நன்கு படிக்கவேண்டும், பகட்டாக உடையணிய வேண்டும், பேண்ட், ஷீ போட்டு இன் பண்ணிக்கொண்டு கம்பீரமாக நடக்கவேண்டும், அருமையாக ஆங்கிலம் பேசவேண்டும் இப்படிப் பல இனிய கனவுகளுடன் சென்னையில் அன்று கால் வைத்தேன்.





என்ன, என் கனவுகள் வித்தியாசமானவைகளாக இருக்கின்றனவா? ஆமாம்! எதிலுமே மற்றவர்களிடமிருந்து வித்தியாசமாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் சிறுவயது முதற்கொண்டே. என்னிடம் இருந்தது. இதில் வேடிக்கையென்ன வென்றால், ஏதேனும் தொழில் செய்யவேண்டும், அதிகம் சம்பாதிக்கவேண்டும் என்றெல்லாம் சிறிது கூட அன்று நான் நினைக்கவில்லை ஆனால் தான் அன்று நினைத்ததெல்லாம் நடந்திருப்பதுடன் நினைக்காத தும் நடந்தது. இறைவன் அருளாலும் அருமை அம்மாவின் ஆசியாலும் இன்று நாடு போற்றும் நிலைக்கு நானும் உயர்ந்திருக்கிறேன்.

சென்னை நகரில் கால்வைத்த அன்று நகரைச் சுற்றிப் பார்த்துவிடவேண்டும் என்ற துடிப்பு எனக்கு ஏற்பட்டது. ஏதோ அழகப்பபுரம் அல்லது வள்ளியூரை விடக் கொஞ்சம் பெரிதாக இருக்கும் என்ற நினைப்பு எனக்கு ஏனென்றால் அன்றைய நிலையில் நான் ஒரு கிணற்றுத் தவளை மாதிரித்தானே! நாங்கள் குடியிருந்த மேற்கு மாம்பலத்திலிருந்து கடற்கரை வரை கால் நடையாகவே விரைவாக நடந்தேன். இன்று டவுன் பஸ்ஸில் ஏறி அந்தப் பாதையில் செல்வதற்கே அதிக நேரம் ஆகிறது ஆனால் நகரைப் பார்த்து விடவேண்டும் என்ற வெறியுடன் அப்படி அன்று நடந்தேன்.



சாந்தோம் தேவாலயத்தை அடைந்தேன். மாதாவின் முன் மண்டியிட்டு வணங்கினேன். என் கனவுகள் எல்லாம் நனவாகவேண்டும் என்று கர்த்தரிடம் வேண்டினேன் "அஞ்சாதே மகனே, உன் ஆசைகள் எல்லாம் நிறைவேறும் என்று ஆசி கூறுவது போல் ஆலயமணி ஒலித்தது. அது இறைவாக்கின் எதிரொலியாகவே எனக்குத் தோன்றியது மிகுந்த மகிழ்ச்சியுடன் மீண்டும் அங்கிருந்து மேற்கு மாம்பலத்திற்கு நடக்கத் தொடங்கினேன்.

வரும் வழியில் இராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளியையும் அப்பள்ளியின் விளையாட்டு மைதானத்தையும் பார்த்தேன். உடனே என் கனவுப் பறவை அப்பள்ளியை வலம் வரத் தொடங்கிவிட்டது. அப்பள்ளியில் நான் படிக்கப்போவது போலவும், அந்த விளையாட்டு மைதானத்தில் விளையாடுவதுபோலவும் இனிய கனவுப்பறவைகள் என் மனத்தோட்டத்தில் பறக்கத் தொடங்கின. கனவும் கூட சுகமாகத்தான் இருந்தது. மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் வீட்டிற்குச் சென்றேன்.

மறுநாள் தான் மலேசியாவிலிருந்து அப்பா வந்தார்கள். அவரை நாங்கள் சென்று வரவேற்றோம். நான் பிறந்த 11ம் மாதத்தில் எங்களை விட்டுப் பிரிந்து சென்றார் அப்பா. அதனால் அவர் முகம் அவ்வளவாக என் நினைவிற்கு வரவில்லை. அம்மா அறிமுகம் செய்த பின்பு தான் அப்பாவை என்னால் அடையாளம் காண முடிந்தது. பாச உணர்வுகளைப் பார்வையாலேயே பரிமாறிக்கொண்டோம். பிரிந்தவர்கள் எல்லாம் கூடிவிட்ட மகிழ்ச்சியுடன் அன்று இல்லம் திரும்பினோம்.

-அப்பா ஊரில் இல்லாத சமயத்தில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அருமை அம்மா அப்பாவிற்குக் கூறினார்கள். சோதனையான சமயத்தில் அருகில் இருந்து தன்னால் உதவ முடியவில்லையே என்று அப்பா வேதனைப்பட்டார். துன்பமான சூழ்நிலையையும் துணிவாகச் சமாளித்த அருமை அம்மாவையும் அண்ணாச்சியையும் அப்பா பாராட்டினார். இனி மேல் அனைவரும் ஒற்றுமையாக இருந்து உழைப்போம் என்ற உறுதி எடுத்துக் கொண்டோம். அன்பு நண்பனே.

காலத்தாலும் கடுமையான சோதனைகளாலும் பாதிக்கப்பட்ட நாங்கள் அதையெல்லாம் ஓரளவு வெற்றிபெற்று ஒன்றாகப் புதுவாழ்வைத் தொடங்கினோம். என் கனவுகள் எல்லாம் பலித்தனவா, அருமை அண்ணாச்சியின் வாழ்வில் அதற்குப் பின்பும் சோதனைகள் ஏற்பட்டனவா என்பதை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். - தொடரும்.......




எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

**அடையார் ஆனந்த விநாயகர்**
**காய்கனி & பழங்கள் அங்காடி**

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

**அடையார் முருகன் டிராவல்ஸ்**

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார்,
சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,



உரிமையாளர்:
த.பரமசிவன்

24 மணி நேர சேவை

## நினைத்த காரியம் தடங்கல் இல்லாமல் வெற்றி பெற

-அருட்பணிசெம்மல் S.V.சிவசம்பந்த நாடார்,
தஞ்சை(வ) மாவட்ட அவைத்தலைவர்,
பெருந்தலைவர் மக்கள் கட்சி,
கும்பகோணம், 9245344808.

பொதுவாக எருக்கன் பூமாலை விநாயகருக்கு மிகவும் உகந்தது. எருக்கஞ்செடிதான் விநாயகருக்கு உகந்த செடியாக சொல்லப்பட்டுள்ளது. இந்த வெள்ளெருக்கு செடியினால் உருவாக்கப்பட்ட

வெள்ளெருக்கு விநாயகரை வீட்டில் வைத்து பூஜை செய்வது வீட்டிற்கு அதிகப்படியான நன்மைகளை கொடுக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த விநாயகரை வீட்டில் வைத்து தொடர்ந்து வழிபாடு செய்துவந்தால் தொடர் வெற்றிகளை குவித்துக் கொடுப்பார். வீட்டில் சிரமங்கள் குறைந்து கொண்டே வரும் பெரிய பெரிய தடைகளும் சுலபமாக தளர்ந்து விடும். வெள்ளெருக்கு விநாயகர் சிலையை கொண்டு வந்த பிறகு முதலில் துளசி தண்ணீரில் அபிஷேகம் செய்யவேண்டும். அதன் பின் சந்தனத்தால் அபிஷேகம் செய்யவேண்டும். அதன்பின்பு வாசனை நிறைந்த பன்னீரால் அபிஷேகம் செய்யவேண்டும். இவ்வாறாக மூன்று நாட்கள் மேற்கூறிய மூன்று வித பொருள்களால் அபிஷேகம் செய்த பின்பு தான் பூஜை அறையில் வைத்து வெள்றெருக்க விநாயகரை பிரதிஷ்டை செய்ய வேண்டும். பிரதிஷ்டை செய்வதற்கு முன்பு அந்த விநாயகரை பூஜை அறையில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு சிறிய மனைப்பலகையின்மேல் அமர வைத்துவிடுங்கள். அதன் பிறகு ஒரு பித்தளை தாம்பாளத்தில் பச்சரிசியை பரப்பி அதன்மேல் இந்த வெள்ளெருக்கு விநாயகரை வைக்கலாம். அப்படி இல்லையெனில் தாம்பாளத்தில் நெல்லை பரப்பியும் அதன் மேல் பிரதிஷ்டை செய்யலாம். இந்த தானியத்தின் மேல் அமர வைத்த விநாயகருக்கு தினந்தோறும் அருகம்புல்லினால் அலங்காரம் செய்து ஏதாவது ஒரு பிரசாதத்தை நிவேதன் செய்து தீபம் ஏற்றி வைத்துவிட்டு உங்களுடைய வேண்டுதல்களை சொல்லி பூஜையினை நிறைவு செய்து கொள்ளவேண்டும். இப்படியாக தொடர்ந்து மேற்படி விநாயகரிடம் உங்களுடைய வேண்டுதலை வைத்து பூஜை செய்து வந்தால் அனைத்து விதமான தடைகளும் தகர்க்கப்பட்டு வெற்றிகள் குவியும் என்பது நம்பிக்கை. நம்பிக்கை உள்ளவர்கள் நம்பிக்கையோடு முயற்சி செய்து பார்க்கலாம். மேலும் இந்த விநாயகருக்கு தனியாக ஒரு மண் அகல் தீபம் ஏற்றுவது நல்லது. அந்த விநாயகரை பார்த்தவாறே அந்த தீபத்தின் சுடர்ஒளி எரிய வேண்டுமே தவிர தீபம் நம்மை பார்த்தவாறு ஒளிரக்கூடாது. முயற்சி செய்து பலன் பெறுங்கள்.




P.நாராயண மூர்த்தி
9444422727
9176838345

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!!!
சைதை நாடார் சங்கம் 38வது ஆண்டுவிழா மலர் சிறக்க வாழ்த்து!

N.தினேஷ்
72991 48303
89390 06732



**ஸ்ரீ கண்ணன் பழமுதிர் சோலை**

1, சௌந்தரேஸ்வரர் தெரு, (சௌந்தரேஸ்வரர் கோயில் அருகில்), சைதாப்பேட்டை, சென்னை-15.



திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு அரிசி, மளிகை, காய்கனி, தேங்காய், வாழை இலை குறிப்பிட்ட நேரத்திற்கு மொத்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.






1987களில், நாடார் முரசு பத்திரிகை அறிமுக வெளியீட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படம். இடமிருந்து வலமாக, அன்றைய தமிழக அரசின் கைத்தறித்துறை அமைச்சர், மாண்புமிகு எஸ்.என்.ராஜேந்திரன், சென்னை வாழ் நாடார் சங்க தலைவர் திரு.சின்னமணி நாடார், எம்ஜிஎம்.குரூப் தலைவர் திரு.எம்.ஜி.முத்து அவர்கள், திரு.ஜூலியன் நாடார், டாக்டர் வி.ஜி.சந்தோஷம் அவர்கள், மாலைமுரசு அதிபர், திரு.ராமச்சந்திரா ஆதித்தனார் ஆகியோர் உள்ள அரிய புகைப்படம்.

# ஸ்ரீ பாலாஜி
# நாடார் திருமண தகவல் மையம்



நாடார் சமுதாயத்தின் கைராசியான
திருமண தகவல் மையம் எங்களிடம்
குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி,
விருதுநகர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள
அனைத்து நாடார்களுக்கும் (இந்து,
கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப
வரன் பார்த்து தரப்படும்.



**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை வராக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

**முகவரி: எண்:389,** T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-182),
**திருவொற்றியூர், சென்னை-19.**

**நிறுவனர்- R.சத்தியவான், இருளப்பபுரம், நாகர்கோவில்-**
**9444247847.**

**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 8056299454, 7092890830.**


## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.9.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், படிப்பு-B.E., (ECE), Private Company, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9600701927, 7358260567. File No:M-193-G.

| | | | |
|---|---|---|---|
| | | லக் | கே |
| | இராசி | | |
| சந் | | | சுக்பு குரு |
| சனி ராகு | | | சூரி செவ் |

| | | | |
|---|---|---|---|
| லக் | கேசந் சுக் | | குரு செவ் |
| | அம்சம் | | |
| சூரி | | | |
| சனி புத | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:தூத்துக்குடி, (திசையன்விளை), இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-15.6.2000, நிறம்-மாநிறம், உயரம்-5.2, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, படிப்பு-MPT., (Physiotherapest), இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள உள்ள அல்லது வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. 8056084344, . File No:M-280-G.

| | | | |
|---|---|---|---|
| | சனி | குரு | சூபுத செசந் |
| லக் | இராசி | | ராகு |
| கேது | | | |
| | சந் | | |

| | | | |
|---|---|---|---|
| லக் | | | |
| | அம்சம் | | ராகு |
| புதகு கே | | | |
| சந் | சனி செவ் | சூரி சுக் | |




# ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**
**செல்9445171819, 044-22253484.**
2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை-32.



# நாடார் நவீன சுயம் வரம்



## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், கடாச்சபுரம் அஞ்சலி, சாத்தான்குளம் தாலுகா, இருப்பிடம்-தூத்துக்குடி மாவட்டம், பிறந்ததேதி-16.8.1993, (1.49பிற்பகல்), ராசி-கடகம், நட்சத்திரம்-பூசம், வயது-30, படிப்பு-M.Tech., மாதவருமானம்-25,000 பெறும், இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துகுடி மாவட்ட மணமகன் தேவை. தொடர்புக்கு: 7010884941, 9514440257, பொருந்தும் நட்சத்திரங்கள்: அசுவதி, புணர்பூசம், அஸ்தம், சுவாதி, மிருகசீரிடம், உத்திராடம், ரேவதி, திருவாதிரை, ரோகினி.

| | | | |
|---|---|---|---|
| | | கேது | சுக் |
| | இராசி | | சூசந் புத |
| சனி | | | |
| | லக் ரா(ராகு) | | செவ் வியா |

| | | | |
|---|---|---|---|
| சூ செவ் | சுக் | கேது | |
| புத | அம்சம் | | வியா |
| லக் | | | சனி |
| | ராகு | சந் | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:காயாமொழி, (ஆதித்தநாடார் குடும்பம்) திருச்செந்தூர் தாலுகா, 27.4.1990ல், பிறந்து (நட்சத்திரம்-ரோகிணி, ராசி-ரிஷபம்), படிப்பு:-B.Tech., படித்து அமெசான் சென்னை ஐ.டி கம்பெனியில் வேலைபார்க்கும் மணமகளுக்கு, நிறம்-சிவப்பு, உயரம்-5அடி6அங்குலம், சம்பளம்-60,000 நல்ல சம்பளத்துடன் ஐ.டிகம்பெனியில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. வெளிநாட்டில் **(UAE, ஆஸ்ரேலியா தவிர்த்து)** வேலை பார்பவர்களும் தொடர்புகொள்ளலாம். 9176233235, 9791101986, 9176233235. File No:P-953-G.

| | | | |
|---|---|---|---|
| | சூ புத | சந் | வியா |
| செவ் சுக் | இராசி | | கேது |
| ராகு | | | |
| சனி | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சந் | | புதசு ரா |
| வியா | அம்சம் | | சூரி சந் |
| லக் செவ் | | | |
| கேது | சனி | | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:பா.சங்கீதா, சொந்தஊர்:-தூத்துக்குடி, இருப்பிடம்-சந்தை ரோடு, தூத்துக்குடி, பிறந்ததேதி-16.2.2000, நிறம்-சிவப்பு, உயரம்-5.8, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை 3ம் பாதம், படிப்பு-M.Sc., Physics., முதுகலை பட்டம், மாதவருமானம்-50,000பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9842460198. email:bhaskarpugalraj@gmail.com.
File No:M-273-G.

| | | | |
|---|---|---|---|
| லக் செவ் | வியா சனி | | சந் |
| சூரி புத | இராசி | | ராகு |
| கே சுக் | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| கேது | | | வியா |
| சந் | அம்சம் | | சனி |
| புத சுக் | | | |
| | லக் | செவ் சூரி | ராகு |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சிவஞானபுரம், சேர்வைகாரன்மடம் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.2.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.7, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-B.Com., MBA., வேலை-பிரான்சு நாட்டு வங்கி, வருடம்:7,05,000வருமானம் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள சென்னையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9381333339, 9444844884. File No:P-792-G.

| | | | |
|---|---|---|---|
| கே மாந் | | | சந் லக் |
| சுக் சனி | இராசி | | |
| சூரி செவ் | | | |
| புத குரு | | | குரு |

| | | | |
|---|---|---|---|
| | சனி | சுக் | சூரி |
| கே மாந் | அம்சம் | | குரு |
| சந் | | | செவ் ராகு |
| | | புத லக் | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மடத்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.11.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.3, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு- B.Com.,MBA., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள அல்லது பெரிய அளவில் தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444416716, 9445073249, File No:-P-989-G

| | | | |
|---|---|---|---|
| சனி சந் | | | |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| லக் | புத | சூரி சுக் | |

| | | | |
|---|---|---|---|
| (வ) சனி | ராகு | (வ) வியா | |
| சூரி சுக் | அம்சம் | | |
| | | | |
| சந் | லக் | கேது | செவ் புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந் கே | புத சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | புத சுக் |
| | | | |
| சூசந் ராகு | குரு | செவ் | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E, வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9445307067, 9445426581.File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | சூபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | சூசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்-கந்தசாமிபுரம், (காயாமொழி), இருப்பிடம்-சென்னை, நிறம்-மாநிறம்,பிறந்ததேதி-26.4.1998, வயது-24, உயரம்-153செ.மீ, ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி 1ம் பாதம், படிப்பு-B.Sc.,M.Sc., (Maths)., Preparing for UGC Net Exam., Working as a Teacher in Educational Institution and Tutor., மாதவருமானம்-20,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9444559709, 8122833967 File No: P-943-G

| | | | |
|---|---|---|---|
| புத சனி | சூசெ சந் | | |
| வியா சுகே | இராசி | | |
| மாந் | | | ராகு |
| லக் | | | |

| | | | |
|---|---|---|---|
| | | வியா | சுக் |
| சனி | அம்சம் | | சூரா மா |
| கேது | | | சந் |
| புத | | | லக் செவ் |

## மறுமணம் இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்-தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-கோவை, நிறம்-மாநிறம்,பிறந்ததேதி-24.12.1990, உயரம்-5அடி3அங்குலம், ராசி-கும்பம், நட்சத்திரம்-பூரட்டாதி 3ம் பாதம், படிப்பு-M.Sc., (IT)., , நல்ல வசதியான குடும்பத்தில் உள்ள பெண், இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள குணமான மணமகன் தேவை. 9994572659, 9344691250, File No: P-147-G

| | | | |
|---|---|---|---|
| லக் | மாந் | செ (வ) | |
| சந் | இராசி | | கு(வ) கேது |
| சனி ரா | | | |
| சூபு(வ) சுக் | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | சூசந் பு(வ) |
| செ(வ) ராலக் | அம்சம் | | |
| சனி | | | கேது |
| கு(வ) மாந் | | சுக் | |


ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

**ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி** 9789427171 7397152711

**வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்**

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

**ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை**

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி | 28 | B.Com | வேலை,சொந்தவீடு | 5.5 | 9789875251 | விருச்சிகம்-கேட்டை | P981 | நேரில் |
| 2. | பிச்சிவிளை | 25 | M.Sc,Ph.D | படித்துவேலை | 5.4 | 9444808977 | மிதுனம்- | P982 | நேரில் |
| 3. | ஆறுமுகநேரி | 29 | B.Com,MBA | படித்துவேலைகுணமுள்ள | 5.4 | 9962073583 | திருவாதிரை2 | P983 | 20பவுன் |
| 4 | பேயன்விளை | 28 | BCA | படித்துவேலை/தொழில் | 5.6 | 9003171254 | தனுசு-பூராடம் | P985 | நேரில் |
| 5 | திசையன்விளை | 28 | B.E | படித்துசென்னையில்வேலை | 157 | 9962667195 | ரிஷபம்-மிருகசீரிஷம் | P987 | நேரில் |
| 6 | தூத்துக்குடி | 25 | B.Com,MBA | படித்துவேலை/தொழில் | 5.3 | 9444416716 | மகரம்-திருவோணம் | P989 | 100பவுன் |
| 7 | உடன்குடி | 30 | M.Sc | மளிகைகடைஅல்லாத | - | 9884886112 | மீனம்-ரேவதி | P991 | நேரில் |
| 8 | தண்டுபத்து | 31 | B.E | படித்துவேலைகுணமுள்ள | 5.4 | 9150929828 | மீனம்-உத்திராடத்தி | P993 | 50+3 |
| 9 | சுண்டங்கோட்டை | 38 | M.Sc | மறுமணம்தூத்துக்குடிமட்டும் | 5.5 | 9444455424 | விருச்சிகம்-கேட்டை | P994 | மறுமணம் |
| 10 | உடன்குடி | 26 | B.E | படித்துவேலைசென்னையில் | 5.3 | 9444780965 | கன்னி-உத்திரம் | P995 | 100பவுன் |
| 11 | பால்குளம் | 22 | B.Sc | படித்துவேலை/தொழில் | - | 9790756398 | கன்னி-அஸ்தம் | P998 | 15பவுன் |
| 12 | வேம்பார் | 29 | B.Tech | படித்துவேலை-மறுமணம் | 5.4 | 9884413189 | தனுசு-மூலம் | P999 | மறுமணம் |
| 13 | தூத்துக்குடி | 26 | BCA,MBA | படித்துவேலை | 5.7 | 9840486653 | விருச்சிகம்-அனுஷம் | P1000 | நேரில் |
| 14 | தென்காசி | 28 | B.Sc,MA-Eng | படித்துவேலை | 168 | 9884897367 | மிதுனம்-மிருகசீரிஷம் | M1 | நேரில் |
| 15 | பெரியகொல்லப்பட்டி | 26 | MBA | நல்லவேலைகுணமுள்ள | 5.2 | 9789136783 | கன்னி-அஸ்தம்4 | M2 | நேரில் |
| 16 | கோவில்பட்டி | 24 | B.Com | நல்லகுணமுள்ள | 5 | 9789038456 | ரிஷபம்-கார்த்திகை2 | M3 | நேரில் |

## C.S.I.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | 25 | M.Sc | நல்லவேலை | 5.2 | சென்னை | 8682931275 | 452G | நேரில் |
| 2 | திசையன்விளை | 38 | B.Sc | படித்துவேலை | 5.3 | சென்னை | 7299525999 | 453G | 30+2 |
| 3 | தூத்துக்குடி | 32 | BCA,MBA | கடவுள்பக்தியுள்ள | 169 | சென்னை | 9566198645 | 454G | நேரில் |
| 4 | திருநெல்வேலி | 20 | B.Sc | நடுத்தரகுடும்பம் | 5.2 | சென்னை | 9360110736 | 455G | நேரில் |

R.C.நாடார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 31 | B.E | நன்குபடித்துவேலை | 5.2 | சென்னை | 9884512430 | 353G | 50+2 |
| 2 | திருச்செந்தூர் | 24 | M.Sc | படித்துவேலை | 154 | சென்னை | 9962111618 | 355G | நேரில் |
| 3 | கன்னியாகுமரி | 26 | M.Sc | படித்துநல்லவேலை | 154 | சென்னை | 9042109958 | 356G | நேரில் |
| 4 | சிவகங்கை | 29 | BBA,MBA | படித்துவேலை | 164 | சென்னை | 9841035802 | 357G | நேரில் |


இமயம்
திருமண தகவல் மையம்

என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....

இந்து / கிறிஸ்தவ நாடார்கள் தங்கள்
வட்டார பழக்க வழக்கத்திற்கேற்ப
வரன்கள் பார்த்து தருகிறோம்.
மறுமணமும் உண்டு.




மின்னல் H.ஸ்டீபன் உரிமையாளர்

எண்.1. ஸ்டேசன்ரோடு. சானடோரியம். சென்னை - 600 047.

தொடர்புக்கு: 7299 55 65 91 / 8939 500 381 / 955 16 16 103

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்: சுவாதி(எ) ரோகிணி, சொந்தஊர்-ராஜாங்காபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-4.12.1999, உயரம்- 5.1, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-B.Com., MBA., இந்த மணமகளுக்கு, படித்து வேலை அல்லது வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு: 9841551529, 7358464609, File No: M-19-G

| | | | |
|---|---|---|---|
| | குரு சனி | லக் | |
| | இராசி | | ராகு |
| கேது செவ் | | | |
| | சூரி மா | சுக்சந் புத | |

| | | | |
|---|---|---|---|
| | குரு கே | லக் செவ் | புத |
| | அம்சம் | | சனி |
| | | | |
| சூசந் மாந் | சுக் | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:மோனிஷா, சொந்தஊர்-காயாமொழி,திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-6.5.1998, உயரம்-5.4, ராசி-சிம்மம், நட்சத்திரம்-பூரம் 3ம் பாதம், படிப்பு-B.E., (CSE)., IBM., மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து ஐடி-யில் வேலை செய்யும் மணமகன் தேவை. 9677238220, 7358640441, File No: M-257-G

| | | | |
|---|---|---|---|
| புதசுக் சனி | சூரி செவ் | | லக் |
| குரு கேது | இராசி | | |
| | | | சந் ராகு |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| புத சனி | | | குரு |
| லக் | அம்சம் | | ராகு |
| கேது | | | |
| | | சூசந் செவ் | சுக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:S.Rethika, சொந்தஊர்:சிவகாசி, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.7.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.4, ராசி-கன்னி, நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-B.Sc., MBA., Engineer in MNC., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு, பி.இ படித்த எம்.என்.சியில் பணிபுரியும் மணமகன் தேவை. தொடர்புக்கு: 8056343725, 9790879884. File No:-P-932-G

| | | | |
|---|---|---|---|
| குரு | சனி | சுக் | சூரி செவ் |
| கேது | இராசி | | புத |
| | | | ராகு |
| லக் | | | சந் |

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சனி |
| சூரி | அம்சம் | | ராகு |
| கேது | | | சந் குரு |
| | செ | லக் | புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:சுவேதா, சொந்தஊர்:விளாம்பட்டி, சிவகாசி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-8.10.1998, வயது-26, உயரம்-5.3, ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி, படிப்பு- Doctor MBBS., MD Pathalogy 1st year., இந்த மணமகளுக்கு, MBBS, MD.,MDS., மணமகன் தேவை. தொடர்புக்கு: 8939997717, 9566066018, File No: M-267-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | சந் | | |
| வியா கே | இராசி | | |
| | | | செவ் ரா |
| | குளி | லக் புத | சூரி சுக் |

| | | | |
|---|---|---|---|
| சனி | | ராசெ சுக் | வியா |
| | அம்சம் | | சூரி |
| லக் | | | |
| குளி | புத கேது | | சந் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:பார்வதி, சொந்தஊர்:ஆறுமுகநேரி, (மேலவீடு), தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-4.6.2000, நேரம்:பகல்:1.07, உயரம்-5.2, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-M.Sc., Maths., இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி, நெல்லை மாவட்ட வரன்கள் தொடர்புக்கு:9841787884, File No: M-281-G.

| | | | |
|---|---|---|---|
| | சனி | சூசெ விசுக் | சந் புத |
| | இராசி | | ராகு |
| கேது | | | |
| | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| சந் | அம்சம் | | சூரி ராகு |
| புவியா கேலக் | | | |
| | சனி | | செவ் |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:நெல்லை மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்த வருடம்-1990, நிறம்-சிவப்பு, உயரம்-155செ.மீ, ராசி-க்ன்னி, நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-MCA., வேலை-I.T., மாதவருமானம்-1,00,000 இந்த மணமகளுக்கு, உயர் கல்வி படித்து சென்னையில் பணிபுரியும் இந்து நாடார் மணமகன் தேவை. தொடர்புக்கு:9865424513. **File No:P-834-G.**

# நாடார் முரசு பிறந்த கதை

ஒரு கிராமம் என்பது, அனைத்து ஜாதிகளின் சங்கமம் என்றே கூறவேண்டும். ஜாதிகள் இல்லை என்பதும், ஜாதிகளை ஒழித்து விடுவோம் என்பதும் ஒரு மாயை பேச்சு என்றே தோன்றுகிறது. ஜாதிகளின் உயர்வு தாழ்வுகளை களைய வேண்டும். மனிதனாக பிறந்தவர்கள் சமமானவர்கள்தான். அதே சமயம் எல்லா ஜாதியினரும் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் இனத்தவரோடு மத நல்லிணக்கத்தை பேண வேண்டும். ஒரு நல்ல கிராமங்களின் அழகே அந்த கிராமத்தில் வசிக்கும் ஜாதிகளின் சங்கமம் தான் நாடார் சமுதாயம் இன்று இவ்வளவு மதிப்பும் மரியாதையையும் சம்பாதித்தது பிற ஜாதியினர்கள் நாடார்களின் மேல் வைத்திருந்த நம்பிக்கையும் ஒற்றுமையும் தான் என்றால் அதுதான் உண்மை, அந்த காலத்தில் வணிகம் என்றால் செட்டியார் சமூகத்தினர்கள் தான், முன்னோடியாக இருந்தார்கள். பலவிதமான வியாபாரத்திலும் செட்டியார்கள்தான் முன்னோடிகள், சிலப்பதிகாரம் கூட வணிகர்களை முன் வைத்து தான் எழுத்தப்பட்டிருந்தது. சந்தர்ப்ப வசத்தால் நலிந்திருந்த நாடார்கள் உழைப்பையும் நேர்மையையும் மூலதானமாக கொண்டு பலர் வெளி மாநிலங்களுக்கும் சென்று வேலை செய்து தன் பொருளாதாரத்தை பெருக்கியது அதே நேரம் ஒவ்வொரு கிராமத்திலும் சுய தொழில் செய்து கொண்டிருந்த பலர் தனது பனை தொழிலுக்கு இடையூறு ஏற்பட்ட காலத்தில் சிறு வியாபாரங்கள் செய்ய ஆரம்பித்தார்கள். இயற்கையாகவே தன் திறமையால் மக்களை கவர்ந்த நாடார்கள் மளிகை கடை, பாத்திரக்கடை, அரிசி கடை வியாபாரம் போன்றவற்றில் வெற்றி பெற ஆரம்பித்தனர். அனைத்து ஜாதியினரையும் அண்ணாச்சி, அக்கா என்று முறைகூறி அழைத்து அவர்களது அன்பை பெற்றார்கள். செட்டியார்கள் கடை என்ற பெயரை மாற்றி நாடார் கடை என்ற பெயரை பெற்றார்கள். அதுவே முறை கூறி அண்ணாச்சி கடையாக மாறியது ஆகவே அண்ணாச்சி கடை அனைத்து ஜாதியினருக்கும் உரிமையான கடையாக மாறியது எல்லா சமுதாயத்தினரும் நாடார்களை உரிமையோடு அன்பு காட்ட ஆரம்பித்தனர். பிற ஜாதி மக்களையெல்லாம் நாடார்களோடு ஒற்றுமை பாராட்டி வாழ்ந்தனர். நாடார்கள் பொருளாதாரத்தில் பிறர் மதிக்கும் அளவுக்கு அரசாங்க உத்யோகத்திலும் அரசியல் பலத்திலும் உயர ஆரம்பித்தனர். அரசியல் பலத்துக்கு அவகளது ஒற்றுமைதான் காரகணமாயிருந்தது. இதை கண்ட சுயநல அரசியல்வாதிகள் நாடார்களை பிரித்து சிதைக்க பல வழிமுறைகளை ஆராய்ந்தனர். அதில் ஒன்று மதம் இந்த மதத்தால் நாடார்களை சிதைக்க நாடார்களிலேயே பல துரோகிகள் தனது சுய விரோதத்தை பயன்படுத்தி பல சண்டை சச்சரவுகளை தூண்டுகிறார்கள். இப்பேர்பட்ட துரோகிகளை பிரித்தாளும் அரசியல்வாதிகள் தனது அரசியல் வெற்றிக்காக பல சலுகைகள் அந்த துரோகிகளுக்கு கொடுத்து பயன்படுத்திவிடுகிறார்கள் அவர்களே தான் பிரித்து இன்பம் அனுபவிக்கும் பல துரோக நாடார்கள், நாடார்களை பல பிரிவினைப்படுத்தி விடுகிறார்கள்..

# நவம்பர் 2ஆம் நாள்! கல்லறைத் திருநாளும் அதன்முக்கியத்துவமும்

எழுத்து:அன்னக்கிளிராசையா

ஆதலால் பாவங்களிலிருந்து மீட்கப்படும்படி, இறந்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது,

புனிதமும் பயனுள்ள எண்ணமுமாய் இருக்கிறது. (2மக்கபேஆகமம் 12:46)

இன்று நவம்பர் 2ஆம் தேதி. உலகம் முழுவதிலுமுள்ள கிறிஸ்துவர்கள் இறந்தோரை நினைவு கூர்ந்து அவர்களின் கல்லறைகளை மலர்களால் அலங்காரம் செய்து மெழுகுதிரி ஏற்றி அவர்களின் ஆன்ம அமைதிக்காக மன்றாடியும் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுத்தும், தானதருமங்கள் மற்றும் பரிகாரர்கள் செய்தும் கொண்டாடுகின்றார்கள்.

இறந்தவர்களின் உடல் கல்லறையில் புதைக்கப்பட்டிருந்தாலும் எரித்து சாம்பலாக்கப்பட்டிருந்தாலும் உலகில் அவர்களின் உடலோடிருந்து அவர்களை வாழ வைத்துக்கொண்டிருந்த அவர்களது உயிரும் உணர்வுமான ஆன்மா அவர்களை புதைத்துப் புதை குழியில்தானே அவர்களின் உடலோடோ எரித்தெடுக்கப்பட்ட உடல் சாம்பலோடோ அடங்கிப்போய்விடுவதில்லை. மனித உடலிலிருந்து பிரிந்தப் பின்னும் நித்தியத்துக்கும் வாழ்ந்து கொண்டிருப்பவைகளாகும்.

மனிதர்களின் ஆன்மாக்களுக்கு சாவோ முடிவு காலமோ கிடையாது.

மனிதர்கள் இறந்ததும் அவ்விடத்திலேயே, அவர்கள் செய்த பாவப்புண்ணிய செயல்களுக்குரிய தீர்ப்பு அளிக்கப்பட்டுவிடும்.

இவ்வுலக வாழ்வில் தங்களை உண்டாக்கி உயிர் அளித்து நலன்களை அருளிய இறைவனுக்கு ஏற்புடைய "இறை அன்பிலும் பிறர் அன்பிலும் வழுவாதிருந்து நன்நெறி ஒழுக்கத்தில் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து, தூயவர்களாக இறந்தார்களென்றால் அவர்கள் இறந்த அச்சணமே அவ்விடத்திலிருந்து மோட்சம் போக அவர்களது ஆத்துமாக்களுக்கு இறைவனால் தீர்ப்பளிக்கப்பட்டுவிடும். அவ்வாரே இறைவனால் மன்னிக்க முடியாத பாவங்களைச் செய்துள்ள கொடிய அக்கிரமிகளும் இறந்த அச்சணமே அவ்விடத்திலேயே தீர்ப்புக்கு உள்ளாகி உடல் மண்ணுக்கும் ஆன்மா முடிவில்லா வேதனை அளிக்கும் நரகத்துக்கும் போக கடவுளால் தீர்ப்பளிக்கப்படும்.

மேலும் அற்பப்பாவங்களைச் செய்துள்ள நிலையில் இறந்தவர்களுக்கு அந்நேரம் கடவுள் கொடுக்கும் தீர்ப்பினால் அவர்களது ஆன்மா அவர்கள் செய்த பாவங்களுக்காக வேதனை அனுபவித்துப் பரிகரித்து ஆன்ம சுத்திகரமாகி தூய்மையடைந்து மோட்ச பாக்கியம் பெரும் பொருட்டு உத்தரிக்க ஸ்தலம் என்னும் நிலையிலிருக்கு உள்ளாக்கப்படும்.

மேற்காணும் அந்த நிலையிலுள்ள உத்தரிகஸ்தல ஆன்மாக்களின் பாவங்கள் நீங்கப்பட்டு மோட்சம் சேர இப்போது உலகில் வாழ்வேரின் செபங்களும் தர்மங்களும் பரிகார ஈடுகளோடு செய்யும் காணிக்கைகளும் ஏற்கப்படும் என்பதாலேயே அதற்கென திருச்சபையானது நவம்பர் மாதத்தை தேர்ந்தெடுத்து நவம்பர் 2ம் நாளை கல்லறைத் திருநாளாக பிரகடனப்படுத்தியதுடன் இம்மாதம் முழுவதிலும் உத்தரிக்கஸ்தல ஆன்ம இளைப்பாற்றுகாக ஜெபித்து பரிகாரங்கள் செய்துவர தூண்டுகிற அதன் விசுவாசிகளை.

மரித்த விசுவாசிகளின் ஆன்மா
இறைவனின் இரக்கத்தால்
நித்திய இளைப்பாற்றியை அடைய
அனைவரும் இறைவனிடம்
மன்றாடுவோம்.

**பெண்கள் முன்னேற்றத்திற்காக உருவான புதிய தொழில் சிந்தனை!**

இந்தியாவின் முதுகெலும்பு விவசாயிகள்! அதுபோல் குடும்பத்தின் முதுகெலும்பு குடும்பத்தலைவிகளான பெண்கள்! ஒவ்வொரு குடும்பத்தின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு குடும்பத்தலைவிகளுக்கு இருக்கிறது. அவர்கள்தான் சரியான உணவுப்பொருட்களை தேர்ந்தெடுத்து, முறையாக சமைத்து, அன்பாக பரிமாறி, ருசித்து சாப்பிடவைத்து குடும்பத்தினர் ஒவ்வொருவரின் ஆரோக்கியத்தையும் பேணுகிறார்கள்.

பாசத்திற்குரிய நமது பெண்களுக்கு பல பருவங்கள். பாட்டி, தாய், சகோதரி, மனைவி, மகள் என்று ஒவ்வொரு பருவத்திலும் அவர்களுக்கு பல்வேறு கடமைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் பெண்கள் செவ்வனே செய்கிறார்கள்.

பத்மசிங் ஐசக் அவர்கள் ஆறுபேர் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். அம்மாவால் வளர்க்கப்பட்டவர். பாட்டியால் பராமரிக்கப்பட்டவர். மூத்த சகோதரியால் வழி நடத்தப்பட்டவர். மனைவியால் தோள்கொடுக்கும் தோழமையை பெற்றவர். அதனால் குடும்ப மரபு வழியாக அவருக்கு பெண்கள் மீது தனி மரியாதை உண்டு. அந்த மரியாதையை பத்மசிங் ஐசக் அனைத்து பெண்களிடமும் காட்டினார். தனது தாய்க்கு, மனைவிக்கு, சகோதரிக்கு கொடுத்த மரியாதையை கடைக்கோடிவரையுள்ள ஒவ்வொரு முகம் தெரியாத சகோதரிகளுக்கும் கொடுக்க அவர் விரும்பினார்.



அதனால் பெண் சமூகத்தின் மீது அவருக்கு கருணை பிறந்தது. அப்போதுதான் அவருக்கு பெண் சமூகம் அடிமைப்பட்டுக்கிடந்த உண்மை புரிந்தது.

பெண்கள் சமைத்துப்போடவே பிறந்தவர்கள் என்ற எண்ணம் அப்போது ஒருசாராரிடம் இருந்துகொண்டிருந்தது. அதனால் அதிகாலை முதல் பலமணிநேரம் பெண்கள் சமையல் கட்டுக்குள் அடைக்கப்பட்டார்கள். விதவிதமாய் சமைப்பதும், பரிமாற வேண்டியதுமே அவர்களது அன்றாட வேலையாக்கப்பட்டது. தான் சமைத்ததை சாப்பிட்டவர்கள் 'சுவையாக இருக்கிறது என்று சொல்லமாட்டார்களா?' என்ற ஏக்கத்தோடு அவர்கள் சமையல் அறை கதவிடுக்கில் காத்துக்கிடந்த நிலையும் இருந்தது.



அதனால்தான் வயதுக்கு வந்த காலத்தில் இருந்து - வாழும் இறுதிக்காலம்வரை சமையல் அறையிலேயே அடைபட்டுக்கிடந்த பெண்களைப் பார்த்து தலைவர்கள் பலர் 'பெண்களுக்கு சமூக விடுதலை கொடுத்து அவர்களை முன்னேறச் செய்ய வேண்டும்' என்று அறைகூவல் விடுத்தார்கள்.

அதை தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டது. பெண்கள் கல்வி கற்றார்கள். பொது அறிவும், அரசியல் தெளிவும் பெற்றார்கள். ஆனாலும் பெண்களுக்கு சமூக விடுதலை கிடைத்ததா?

இல்லை! கூடுதலாக இன்னொரு சுமைதான் அவர்கள் தலையில் விழுந்தது. அது என்னவென்றால், 'சமையலையும் கவனி. படித்த படிப்பிற்குரிய வேலையையும் கவனி' என்று பெண்கள் இருதலைக்கொள்ளி எறும்புகளாக்கப்பட்டார்கள்.

பெண்களின் இந்த நிலை பத்மசிங் ஐசக் அவர்களது மனதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. அதுபற்றி அவர் விளக்கமாக சொல்கிறார்:

"ஆதியில் சிறியதாக இருந்த சமையல் அறையை பின்பு பெரியதாக கட்டினார்கள். முதலில் அம்மியும், உரலும், ஆட்டுக்கல்லும் இருந்த சமையல் அறையில் பின்பு கிரைண்டர், மிக்சி போன்ற நவீன சாதனங்களை இடம்பெறச் செய்தனர். நவீன அடுப்புகளையும் அங்கே பொருத்தினார்கள்.

அதனால் முதலில் சிறிய சிறையாக இருந்த சமையல் அறை பின்பு நவீன பொருட்கள் அடங்கிய நாகரீக சிறையாக மாறி பெண்களை அங்கேயே சிறைவைத்தது.

தினமும் அதிகாலையிலேயே பெண்கள் எழுந்திருக்க வேண்டும். சமையலை செய்து முடிக்க வேண்டும். பின்பு குழந்தைகளை கவனித்து பள்ளிக்கு அனுப்ப வேண்டும். அதன் பின்பு தானும் கிளம்பி அலுவலக பணிக்கு ஓட வேண்டும். (தொடரும்)

உ
Cell : 98402 87570
மங்கள ஈஸ்வரி
திருமண தகவல் கூடம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
(நேரம் : காலை 10.00 - பிற்பகல் 2.00
மாலை 4.00 - 7.00)


எண். தெற்கு மாடவீதி, திருமுல்லைவாயல், சென்னை-62.


WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS
AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

# உறவுகள்!

**பாலகன் ஆறுமுகசாமி - தமிழகம் உறவு**

அமெரிக்காவுக்கு பெருமைமிகு தமிழர்களை இவர் அழைத்துச் செல்வதும், அங்குவரும் தமிழர்களை அன்பொழுக வரவேற்று அமெரிக்காவின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களை தமது சொந்த பொருட்செலவில் சுற்றிக் காட்டுவதும் இவரின் உடன்பிறந்த சுவாபம். அமெரிக்க வாழ் தமிழர்கள் மத்தியில் இவருக்குத் தனி மரியாதையும், மதிப்பும் உள்ளது. தன்னைப் போல பிறரைப் போற்றும் பண்பாளர். இதற்கு இவர் நன்றி கூறுவது இவரைச் சிறுவயதில் செதுக்கிய திருச்சி அருகேயுள்ள இராமகிருஷ்ணா குருகுலத்தைத்தான்! கடல்தாண்டிச் சென்றாலும் உறவுகளை மறக்காமல் மேலும், மேலும் வளர்க்கின்ற அவரது பண்பு பாராட்டுக்குரியது. எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான் என்பதைவிட எப்படி வாழ்ந்தான் என்று பார்ப்பதே முக்கியம் என்பார்கள். பிறருக்காக வாழ்ந்த மனிதர்களே வரலாற்றில் புகழுக்குரியவர்களாகப் போற்றப்படுகிறார்கள். "நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே, நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்று கேள்" என மறைந்த அமெரிக்க அதிபர் கென்னடி சொன்னதைச் சுட்டிக் காட்டுவார்கள்.

"வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமைய வேண்டுமானால் பெரும் சாதனைகள் புரிவதற்காக அதனைச் செலவிட வேண்டும். திருமணம் முடிப்பதும், குழந்தைகளைப் பெறுவதும் சாதாரண வேலை. மிருகங்களகூட அதைச் செய்கின்றன" என்றார் மகாத்மாக காந்தி.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பார்கள். உலகிலுள்ள 700 கோடி மக்களும் கூடி வாழ்வது எத்தனை பெரிய சிறப்பு! மகிழ்ச்சி, அன்பு, ஒற்றுமை, உறவு, உழைப்பு, உயர்வு, உலகமயமாக்கல் என்ற கொள்கைகளே உலக மக்களை ஒருங்கிணைக்கும் பாலங்களாக அமைய முடியும்.

**உறவுகள் மட்டுமே ஜகத்தினை ஆளமுடியும்**

18-ஆம் நூற்றாண்டில் முதல் தொழில் புரட்சி ஏற்பட்டது. மனிதனும், பிராணிகளும் செய்த பணிகளை நிராவி எந்திரம் செய்யும் வகையில் நவீன கண்டுபிடிப்புகள் அமைந்தன. மனித வேலைகளை எந்திரங்கள் செய்யும் புரட்சி பரவி விரிந்தது 18-ஆம் நூற்றாண்டில் தான் விஞ்ஞானமும், பகுத்தறிவுச் சிந்தனையும் மனித வாழ்க்கையை மாற்றத் தொடங்கின. அமெரிக்கப் புரட்சிக்கும், பிரெஞ்சுப் புரட்சிக்கும் அவை காரணங்களாய் அமைந்தன. அச்சடித்த தகவல்களின் பயன்பாடு விரிந்து பரந்தது. கூடவே முதலாளித்துவமும் வளர்ந்தது. 19-ஆம் நூற்றாண்டில் மின்சாரம் பயன்பாட்டு சாதனங்கள், ஸ்டீல், பெட்ரோலியப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு இரண்டாவது தொழில் புரட்சி ஏற்பட்டது.

ரெயில்வேக்கள், நீராவி கப்பல்கள், விரைவான மற்றும் பரவலான தகவல் தொலைத் தொடர்பு ஆகிய கண்டுபிடிப்புகள், வளர்ச்சிகள் நிகழ்ந்தன. எந்திர சாதனங்கள் உற்பத்தி, எந்திரங்களே எந்திர பாகங்களை உற்பத்தி செய்யும் நிலை, 19ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. பாகங்களை இணைக்கும் அசெம்பிளி லைன் தொழில்நுட்பம் 19ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. நுகர்வோர் பொருட்களைத் தொழிற்சாலைகளில் அதிவேகமாகத் தயாரிக்கும் முறை பரவி விரிந்தது. கார்கள், விமானங்கள், படகுகளுக்கு இயங்கும் சக்தியைத்தரும் இண்டர்னல் கம்பூஷன் என்ஜின்களை வடிவமைக்கும் கண்டுபிடிப்பாளர்கள் பல சாதனைகளைப் படைத்தனர். மின்விளக்கு, தொலைபேசி, தட்டச்சு எந்திரம், தையல் எந்திரம் முதலியன கண்டுபிடிக்கப்பட்டன.

20-ஆம் நூற்றாண்டின் 100 ஆண்டுகளில் தொழில்நுட்பம், விஞ்ஞானம், கண்டுபிடிப்புகள் அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்தன. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விமானங்கள், கார்கள், ரேடியோ ஆகிய புதிய கண்டுபிடிப்புகள் நம்மை வியப்பிலும், ஆச்சரியத்திலும் ஆழ்த்தின. 20ஆம் நூற்றாண்டின் முடிவில் விண்வெளி ஓடங்கள், கம்ப்யூட்டர்கள், செல்போன்கள், இண்டர்நெட் ஆகியவை நமது அன்றாட வாழ்க்கை முறைகளாக மாறியிருந்தன. (தொடரும்)



**Dr.M.Sundaralingam** B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277

AB

**ஆர்த்தி பிராய்லர்ஸ்**

77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market) M.G.R.Nagar, Chennai-78.




செல்:9444484977, 9962454977, 044-25980239.

**ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்**



ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

**ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும்.** நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை



S.ராஜையா நாடார்

**சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்**

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்

168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு, (அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29

**போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.**

# பாஞ்சாலி

**பிரசவ வேதனை...** எஸ்.விஜயராஜ்



திரவுபதியின் திருமணம் முடிந்து விட்டது.. விழா மிகவும் கோலாகலமாக நடந்தது.

மன்னர்கள் பலர் வந்திருந்தனர்.. மகாராணிகளும் வந்திருந்தனர்..

சிற்றரசர்கள் என்றும்.. பெரும் தனக்காரர்கள் என்றும்.. நிறைய பேர் வந்திருந்தனர்..

கிருஷ்ணனும்.. பலராமனும் கூட திருமணத்துக்காக அங்கேயே இருந்தனர்..

விழா மண்டபமே.. உற்சாக கொண்டாட்டங்களால் நிறைந்து இருந்தது.. ஆனால் திரவுபதியோ..

பாவம்.. மனப்புழுக்கத்தில் இருந்தாள்.. ஐந்து பேரின் நெருக்கத்தில்.. சங்கடத்தின் இறுக்கத்தில் இருந்தாள்..

யாராவது அவளை பார்த்து நட்போடு சிரித்தால் கூட.. கேலியாகத்தான் சிரிக்கிறார்களோ என்று சந்தேகப்பட்டாள்..

வெட்கப்பட்டாள்.. தலைகுனிந்தாள்.. யுதிஷ்டிரன்தான் திரவுபதிக்கு தாலி கட்டினான்.. அப்படியானால் மற்றவர்கள் கட்டவில்லை.. தேவை இல்லையாம்..

அண்ணனுக்கு மனைவி என்றால்.. தம்பிமாருக்கும் அவள் மனைவிதானாமே.. புதிய சித்தாந்தம்..

புதிய இலக்கணம்.. ஆமாம்.. பாண்டவர்கள்தான் முதல் முதலாக அறிமுகம் செய்தார்கள்..

திருமணம் முடிந்த மறுநாளே.. மூன்று பேருக்கு பிரசவ வேதனை வந்து விட்டது..

மூன்று பேர் என்றால் கிருஷ்ணன்.. துருபதன்.. யுதிஷ்டிரன்..

என்னிடம் பாதி ராஜ்ஜியம் மட்டுமே இருக்கிறது.. மீதியும் வேண்டும்.. இது துருபதனின் வேதனை..

எங்களுக்கு பாதியை தந்தாலே போதும்.. அஸ்தினாபுரத்தை இரண்டாக பிரிக்க வேண்டும்..

இது யுதிஷ்டிரனின் வேதனை..

கிருஷ்ணனின் வேதனையோ வித்தியாசமானது.. துருபதனையும் யுதிஷ்டிரனையும் முதலில் பலப்படுத்த வேண்டும்..

அவர்கள் பலப்பட்டாலே போதும்.. அவர்களை பயன்படுத்தி நானும் என்னை பலப்படுத்திக் கொள்ளுவேன்.. இது கிருஷ்ணனின் வேதனை..

இந்த இடத்தில் கிருஷ்ணனைப் பற்றி ஒரு சின்ன தகவலை நான் சொல்லத்தான் வேண்டும்.. அவனது அரசியல் பின்னணியை பற்றி..



மாமன்னன் கம்சனுக்கு ஒரு தங்கை இருந்தாள்.. பெயர் தேவகி..

இந்த தேவகியின் எட்டாவது மகன்தான் கிருஷ்ணன்.. இந்த கிருஷ்ணனால்தான் கம்சனுக்கு மரணம் ஏற்படும்.. அது தேவவாக்கு..

கம்சன் அதை முன்னமே அறிந்திருந்தான்.. இந்நிலையில் ஒருநாள்..

கம்சன் நம்பியது போலவே.. அவனை கிருஷ்ணன் கொன்று விட்டான்..

அந்த இழப்பு.. கம்சனின் குடும்பத்தினருக்கு.. கடுமையான கோபத்தை ஏற்படுத்தியது..

என்றாலும் கூட.. கம்சனுக்கு இருந்தவை.. பெண் குழந்தைகள் மட்டுமே.. ஆண் வாரிசுகள் இல்லை.. எனவே.. பழிவாங்கும் எண்ணம் மட்டும்தான் அவர்களுக்குள் இருந்ததே தவிர.. அவர்களால் கிருஷ்ணனை பழிவாங்க முடியவில்லை.. அந்த நிலையில்..

அந்த பெண்களுக்கு திருமணம் நடந்தது.. மணந்தவனோ ஒரு மாமன்னன்.. பெயர் ஜராசந்தன்.. வல்லவன்..

அவனிடம் தங்கள் மனக்குமுறலை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்..

கிருஷ்ணனை நீங்கள் கொல்ல வேண்டும்.. இது எங்கள் பிரார்த்தனை.. கைகூப்பி நின்றார்கள்..

ஜராசந்தன் யார்.. மன்னன் மட்டுமா.. புது மாப்பிள்ளையும் ஆயிற்றே.. எனவே.. மனைவி சொல்லே மந்திரம் என்றான்.. படைகளோடு புறப்பட்டு விட்டான்..

அப்படி ஒரு தடவை அல்ல.. இரு தடவை அல்ல.. ஏறக்குறைய நூறு தடவை.. படையெடுத்தான் ஜராசந்தன்.. துவாரகையின் மீது..

விளைவு.. வீட்டை காலி செய்வதுபோல.. நாட்டையே காலி செய்தான் கிருஷ்ணன்..

அதனால் கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட சுமை மிகவும் பாரமானது.. தாயை காக்க வேண்டும்.. தந்தையை காக்க வேண்டும்..

இன்னும் குடும்பத்தினரை.. குடி ஜனங்களை.. இப்படி அனைவரையும் காக்க வேண்டும்.. ஆனால் அவனாலோ ஒன்றும் செய்ய முடியவில்லை.. (தொடரும்)


## இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

# T.T. மனோகரன்



## பாண்டியன் எண்டர்பிரைசஸ்

நெ.45/13, கோவிந்தன் ரோடு, மேற்கு மாம்பலம்,
(பெருமாள் கோயில் அருகில்), சென்னை-33.
செல்:9444446661, 044-24896661.

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377



காலையில் எழுந்ததும் பத்திரிகை வாங்கி நகைக்கடை எங்கிருக்கிறது என்பதை விளம்பரங்கள் மூலம் தெரிந்து கொண்டு புறப்பட்டாள்.

நகைக்கடையில் தன் கழுத்துச் சங்கிலியை விற்று, இரண்டு சவரனில் ஒரு சின்ன சங்கிலி வாங்கியது போக மீதியாய் அறுபதாயிரத்திற்கு சற்றே குறைந்த தொகை கிடைத்தது. கைப்பையில் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குச் சென்று சிற்றுண்டி முடித்தாள். அலுவலகத்திற்கு போவதா வேண்டாமா என்ற எண்ணம் மீண்டும் வந்தது.

சற்றே சிந்தித்தாள்.

தீர்மானம் மனவயப்பட்டது.

அலுவலகத்திற்குச் சென்றாள்.

தன் இருக்கைக்குச் சென்றமர்ந்தாள். வேலையில் மூழ்கினாள்.

பதினோரு மணி சுமாருக்கு பியூன் வந்தான்.

"எப்பொழுதம்மா வந்தீர்கள்...?"

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"சும்மா..."

"நீங்கள் பார்க்கவில்லையா? நான் வரும்பொழுது நீ எங்கே போனீர்கள்?"

"வெளியே போயிருந்தேனம்மா..."

"நல்லது. நான் பத்து மணிக்கு வந்தேன்."

"நன்றிம்மா. கேட்டேன் என்று தவறாய் எடுத்துக் கொள்ளாதீர்கள்." சொல்லிவிட்டு எம்.டி.யின் அறை நோக்கிப் போனான். அவன் போவதையே கவனித்தாள் சாவித்திரி. எம்.டி.யின் அறைக்குற் போய்விட்டு சிறிது நேரம் கழித்தே வெளிப்பட்டான்.

அவனைத் தன் விரல் நுனியசைவில் தன்னருகே வரும்படிச் செய்தாள்.

"நான் எப்பொழுது வந்தேன் என்று உங்களைக் கேட்கச் சொன்னது யார்...?"

"............"

"எம்.டி.தானே?"

"ஆமாம்..." "சரி, நீங்கள் போகலாம்."

போனான் அவன்.

சாவித்திரிக்குள் கலவரமாயிருந்தது. எதற்காக அந்த மனிதர் என்னை சுற்றி சுற்றியே துருவுகிறார்...?

இது எதற்காக...?

ஒருவேளை திரும்பவும் என்னைக் கூப்பிட்டனுப்புவாரோ.?

அப்படி கூப்பிட்டால்...?

மாட்டேன். போகவே மாட்டேன். எழுந்தாள். கேண்டீனுக்குப் போய் சூடாக ஒரு கப் காபி சாப்பிட வேண்டும் போலிருந்தது. கேண்டீனுக்குப் போனாள். காபி சாப்பிட்டாள். தெம்பாக இருந்தது.

தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

அன்று முழுவதும் எம்.டி.யின் அழைப்பு அவளுக்கு வரவேயில்லை. அந்த அளவில் அவளுக்குள்ளிருந்த புழுக்கம் விலகி சுகமான காற்று வீசி மனம் உலர்ந்ததுபோல் இருந்தது.

தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

மாலையில் "அலுவலகம்" முடிந்ததும் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். வீட்டைத் திறந்து துப்புரவு செய்துவிட்டு, சமையலுக்குத் தயாராகும் போது வாயிலில் நிழலாடியது. திரும்பிப்பார்த்தாள்.

அறிமுகமில்லாத ஒரு இளைஞன்.

அவன் முகத்தில் பண்பாடுகளற்ற உணர்வுகளே ததும்பி வழிவதைத் தன் முதல் பார்வையிலேயே கணித்துவிட்டாள் சாவித்திரி.

"யார் அது...?" ஆத்திரத்துடன் கேட்டாள். "நீங்கதானே மிஸஸ் சாவித்திரி..?" "ஆமாம்".

"உள்ளே வரலாமா? உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்." என்ன? உள்ளே வந்தான். அவள் சொல்லவேண்டுமென்று எதிர்பார்க்காமலேயே நாற்காலியிலமர்ந்தாள். எரிச்சலாயிருந்தது சாவித்திரிக்கு. "உங்கள் கணவர் எனக்கொரு பாண்டு எழுதித்தந்துவிட்டு மும்பதாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்.

"அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" "இல்லாமலா வருவேன்?" "என்ன இல்லாமலா? நீங்கள் கேட்டீர்களே சம்பந்தம்... அது"

"எனக்கும் அந்த மனிதனுக்கும் சம்பந்தம் இல்லை என்கின்ற பொழுது, அவன் எழுதின பத்திரத்திற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. சட்டப்படி இன்னும் அவர்தான் உங்கள் கணவர்."

"வீண்பேச்சு வேண்டாம்."

"நானும் அதைத் தான் விரும்புகிறேன்..."

"அப்படியானால்?"

"பாண்டு சொல்வது எப்படியோ அப்படி நடந்து கொண்டால் உங்களுக்கு எல்லா சௌரியங்களையும் நானே செய்து தருவேன். இந்த ஓட்டு வீட்டிற்குள் முடங்கிக் கிடக்காமல் மாளிகை போன்ற அழகான வீட்டில் குடியமர்த்துவேன்."

"பூ..பூ... பற்களைக்கடித்தாள்.

"ஆத்திரமா...? கொஞ்சம் பொறுங்கள் பாண்டு என்ன சொல்கிறதென்றால்.."

"என்ன சொல்கிறது?"

"படிக்கட்டுமா.....?"

"படியுங்கள் மிஸ்டர்..."

"மகாபாரதத்தில் எப்படி பஞ்சபாண்டவர்கள் கௌரவர்களுக்குத் தங்கள் மனைவி பாஞ்சாலியை அடிமையாக்கினார்களோ அப்படியே நானும் என் மனைவி சாவித்திரியை திருவாளர் சத்தியவேந்தன் என்பவருக்கு நிரந்தர அடிமையாக்குகின்றேன். இதற்காக சத்திய வேந்தனிடம் ரொக்கமாக ரூபாய் ஐம்பதாயிரம் பெற்றுக் கொண்டுள்ளேன்." போதுமா?"

"த்தூ...!" காறி உமிழ்ந்தாள் சாவித்திரி.

"என்னம்மா இவ்வளவு சூடாய் இருக்கிறீர்கள்?"

"சுட்டு எரிக்க முடியவில்லை பார். அதனால்தான்!" என்னை மீறி நீ எங்கும் போக முடியாது!"

ஏன்? உன்னை ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து நான் வாங்கியிருக்கிறேன்." "பத்திரத்தை வைத்து பயம் காட்டுகிறாயோ? பயம் காட்டவில்லை. என் பெயர் சத்திய வேந்தன். சத்தியம் தவறாதவன் என்பதை நிரூபிக்க மட்டுமே இந்தப் பத்திரம்!"

"போ. இதைக் கொண்டு போலீசிலோ... அல்லது கோர்ட்டில் காட்டு. உனக்கும் உன் சத்தியத்திற்கும், உனக்கு இதை எழுதிக் கொடுத்தானே அவனுக்கும் ராஜ மரியாதை கிடைக்கும்!" "என்னை இளித்தவாயன் என்றா நினைக்கிறாய்? பின்னே இந்த பாண்டு எல்லாம் உன்னிடம் காட்ட மட்டும்தான். நீயாக சம்மதித்து என்னோடு வந்துவிட்டால் அரண்மனை மாதிரிவீட்டிற்கு கூட்டிக் கொண்டு போவேன். விதவிதமான சேலைகள். சாப்பாடு.. சௌகரியம். நித்தம் நித்தம் ஒரு புத்தம்புது மனிதனோடு சல்லாபம்...இல்லை என்றால் உன்னைக்கட்டித் தூக்கிக் கொண்டு போவேன். என்னால் முடியும். கெட் அவுட்., கண்களில் தீப்பிழம்பு பொங்குவது போல் நின்றாள் சாவித்திரி. " என்னம்மா சொன்னாய்? "வெளியே போடா நாயே! போதுமா? "அவ்வளவு தைரியமா உனக்கு? "போகப் போகிறாயா இல்லையா?" "நீ என்னோடு வரப்போகிறாயா இல்லையா...?" எழுந்தான். அவள் மீது பாய்ந்தான். லாவகமாய் விலகித் தப்பினாள் சாவித்திரி. வாயில் கதவு திறந்து கிடந்தது. ஓடிப்போய் வெயேறி விடலாம் என்ற எண்ணத்தில் கதவருகே சென்றோள். வாயிலின் குறுக்கே போய் நின்றான் அவன்.

"என்னைத் தடுத்தால் சப்தம் போடுவேன். ஊரைக் கூட்டுவேன், ஊரைக் கூட்டுவேன். சப்தம் போட்டுப் பார்! ஊரைக் கூட்டிப் பார்!" சிரித்தான். முதன் முறையாக பயம் வந்தது சாவித்திரிக்கு. "விடு... வழியை விடுடா!" அவனைத் தள்ளிவிட்டு வெளியே ஓடப் பிரயத்தனப்பட்டாள். அவள் கையைப் பற்றியிழுத்தான் அவன்.



R.JOHN CHARLES CLEMENT

# *Join us for a Celebration of Life*

## in Loving Memory of

## R.John Charles Clement

June 22, 1973 – Oct 04, 2023

### Memorial Service to be held

***Oct 6 2023, 11.30 am***
***St Joseph Church***
***Mahalakshmi Nagar,***
***Selaiyur East,***
***East Tambaram***

Followed by Lunch
at Same Campus Community Hall


## விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம்
## திருமண தகவல் மையம்

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம் பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர்,
செல்:9486555373, 8610212126.

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP **(Member of Parliament)**

**சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்!**



சொல்வது எளிது, ஆனால் சொல்வதைச் செயல்படுத்துவது கடினம், என்று சொல்வார்கள். கடினம் என்பதற்காக அதைக் கடைப்பிடிக்காமல் விட்டால். அது காரியச் சாதனைக்கு வழி வகுக்காது. எளிமையை மக்களுக்கு அறிவுறுத்திய மகாத்மாகாந்தி அதைத் தாமே செயல்படுத்தி காட்டியதால்தான் அவரால் சாதிக்க முடிந்தது.

உயர்ந்த லட்சியங்களுக்காகப் போராடுபவர்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பார்கள். கடினமான ஒரு செயலை ஒருவர் செய்யும் போது மற்றவர்களையும் அவரைப் பின்பற்றிச் செயல்பட வைக்கும். அந்தப் பண்பு இயல்பானதாக நம்முள் தானே முளைத்தெழ வேண்டும். மிகப்பெரிய காரியங்களைச் செய்துவிட்டு தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போல் அடக்கமாக எவர் இருக்கிறாரோ அவருக்குள்ள மதிப்பும், மரியாதையும் என்றும் நிரந்தரமாக இருக்கும். அவரது செயல்பாடுகள் மதிக்கப்படும். அதுவும் வெற்றிக்கான வழிமுறைதான்.

சிகாகோ ரயில் நிலையம் - நோபல் பரிசு பெற்ற அந்த மாமனிதனைப் பாராட்டி மகத்தான வரவேற்பு கொடுக்க மிகப் பெரிய கூட்டம் பத்திரிகையாளர்கள், முக்கியஸ்தர்கள், அரசியல் பிரமுகர்கள் என்று பலரும் அவரது வருகையை ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் காத்திருக்கின்றனர். ரயில் வந்து நின்றதும் அந்த மாமனிதர் மிக எளிமையான தோற்றத்துடன் ரயில் நிலையத்தில் இறங்குகிறார்.

அவர் வேறுயாருமல்ல ஆல்பர்ட் சுவிட்சர், ஆப்பிரிக்க மக்களிடையே தங்கி தொழுநோயாளிகளுக்குத் தொண்டு செய்துப் பொது நலவாழ்வில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்ட ஆல்பர்ட் சுவிட்சர். அவரது மகத்தான சேவைக்குத்தான் நோபல் பரிசு கொடுத்தார்கள். அந்த மாமனிதர் ரயிலைவிட்டு இறங்கும் போது புகைப்படக்காரர்கள் போட்டோ எடுக்கிறார்கள். பிரமுகர்கள் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வரவேற்கிறார்கள். பத்திரிகையாளர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்கிறார்கள். இவை எதையும் பற்றியச் சிந்தனை இல்லாமல் அவர் அவர்களிடம் "ப்ளீஸ், ஒரு நிமிடம் பொறுங்கள் இதோ வந்து விடுகிறேன்" என்று அனுமதிபெற்று மீண்டும் ரயில் பெட்டிக்குள் சென்றார்.

அங்கு ஒரு வயதான மூதாட்டியின் லக்கேஜ் பெட்டியை இவர் தூக்கிக் கொண்டு அந்த மூதாட்டியைப் பாந்தமாக அரவணைத்துக் கூட்டிக் கொண்டு ரயில் பெட்டியை விட்டு இறங்கினார். கூட்டத்தினர் வழி விட அந்த மூதாட்டியை அழைத்துச் சென்று ரயில் நிலையத்துக்கு எதிரில் இருந்த பேருந்து ஒன்றில் ஏற்றி அமர்த்திவிட்டு, மீண்டு ரயில் நிலையத்திற்கு வந்தார். "சாரி, உங்களைக் காக்க வைத்தமைக்கு மன்னியுங்கள், பயணத்தில் உடன் வந்தவர், பேருந்தில் ஏற்றிவிடும்படிக் கேட்டுக் கொண்டார். அதனால்தான்" என்று அனைவரையும் பார்த்து சுவிட்சர் சொல்ல, செய்தியாளர் பகுதியிலிருந்த ஒருவர் சொன்னார்.

"சொல்வதை, செயல்வடிவில் செய்து காட்டியதைப் பார்க்கிறோம். நோபல் பரிசுக்குத் தகுதியானவர் இவர்" என்று பாராட்டினார். ஆப்பிரிக்காவில் சுவிட்சர் நமது திருவள்ளுவர் எழுதிய திருக்குறளைப் பற்றி அருமையான ஒரு நூல் எழுதினார். தமது பொது நல வாழ்க்கைக்கு வழிகாட்டியாக திருக்குறளில் பல அரிய விஷயங்கள் இருப்பதாகப் புகழ்ந்து கூறியுள்ளார். அதனால்தான் வள்ளுவர் குறிப்பிட்டபடி

"நிலையின்திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

குறிப்பாக மிகப்பெரிய சாதனை புரிபவர்கள் வெற்றியைப் பெறும் போது தலைசாய்ந்த நெற்கதிர்களாக அடங்கி இருக்க வேண்டும். அதைக்கற்றால், கடைப்பிடித்தால் வெற்றி நிரந்தரம்.


வாழ்க வளர்க ! உ

வீடு, மனை வாங்கவும், விற்பனை செய்யவும் அணுகலாம் வாங்க !!



ஸ்ரீ அருள் ஏஜென்ஸீஸ்

ரியல் எஸ்டேட்



M.L. சுவாமி

No. 59, 1st Floor, Arcot Road, Valasai to Porur, Chennai - 116.

Cell : 98410 74090 [94443 42707] RE - Invesments - Joint Ventures



SVS நாடார் திருமண தகவல் நிலையம்

(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)

No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு

**தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424**

**E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com**

திருமணப்பட்டு
ஜவுளிகளுக்கு.........

ராஜ்மஹால்

வெங்கலக்கடைத் தெரு,
மதுரை-1. போன்: 2622647, 2666666.

தொட்டுத் தொடரும் ஒரு
பட்டுப் பாரம்பாரியம்.


# உன் சிந்தனை உனது வெற்றி

**நிகழ்காலத்தை வெற்றி கொள்ளுங்கள்**

- முனைவர் சா.தா.நோவா **செல்:9443303456,**



உங்கள் மீதே உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிடில், அடுத்தவர்கள் உங்களை எப்படி நம்புவார்கள்? நம்பகத்தன்மை தான் அடுத்தவர்களை உங்கள் பக்கம் ஈர்க்கும்.

நம்பிக்கை ஒரு ஊக்க சக்தி - அது உங்களையும் ஊக்குவிக்கும். அடுத்தவரையும் ஊக்குவிக்கும்.

எனவே நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் மீது மட்டுமின்றி நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் செயலின் மீதும்.

"நம்பிக்கை உங்கள் நோக்கத்தை வலுப்படுத்தும்"

நம்பிக்கை அற்றவர்களும், அரைகுறையாக நம்புகிறவர்களும், வாழ்க்கையின் உள்ளத்தை அடைய முடியாமல் போய்விடும். அவர்களின் வாழ்க்கை மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும்.

எனவே நம்முடைய மிகப்பெரிய பலம் தன்னம்பிக்கை ஆகும். ஆகவே தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவோமாக.

சாதாரண ஆதார சக்தி எல்லாருக்குள்ளும் இருக்கிறது. அநேகர் அதை இனம் கண்டதில்லை. இனம் கண்டவரும் இதை வளர்த்துக் கொள்வதில்லை.

"இசை வயலினில் இல்லை. அதை மீட்டும் விரல்களில் இருக்கிறது. இதைப் புரிந்து கொண்டால் உங்கள் மூளையில் முடங்கி கிடக்கும், அந்தச் சக்தியை நீங்கள் தட்டியெழுப்பி விடுவீர்கள்."

"ஆபிரகாம்லிங்கன் நடுத்தர வயதை எட்டும்வரை தோல்விகரமானவராகவே இருந்தார். அவருடைய காதல் மனைவி 'ஆன்ரட்லஜ்' அளித்த உந்துதல் அவரைக் கிளிர்ந்தெழுச் செய்து வழக்கறிஞரானார். செனட்டரானார். முடிவாக வெள்ளை மாளிகை அதிபருமானார்.

நம்பிக்கை என்கிற மனோபாவம் எத்தனை அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறது தெரியுமா?

ஆயுதமேந்திய ஆங்கிலேயருக்கு எதிராக தனது ஆத்ம பலத்தைக் கொண்டு போர் செய்து, காந்தி இந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித் தரவில்லையா?

ஆதார சக்தி ஒருவருக்குள் காதல், இன்னொருவருக்கும் ஆத்ம பலம். உங்களுடைய ஆதார சக்தி எதுவென்பதை கண்டு கொள்ளுங்கள். பயன்படுத்துங்கள்.

"எது பலமோ அதை அதிகரித்து
கொள்ளுங்கள்!
எது பலவீனமோ அதை
அகற்றி விடுங்கள்!
நம்பிக்கையின் சக்தி அளவற்றது

"நம்மை நாமே நம்புவது ஒரு பிரபஞ்ச சக்தி. உங்களால் முடியுமென்று நம்புங்கள். எப்படி வர விரும்புகிறீர்களோ, அப்படியே வருவீர்கள், எப்படி இருக்க விரும்புகிறீர்களோ அப்படி இருக்க முடியும்"

எதைச் சாதிக்க விருப்பமோ, அதைச் சாதிக்க முடியும்.

தடைக்களுக்கு அப்பால், தோல்விகளுக்கு அப்பால், நீங்கள் பெற வேண்டியதை பெற முடியும். உங்களுடைய வெற்றி உறுதி செய்யப்படும். எல்லாம் நம்புதலின் சக்தி.

"நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ அப்படியே ஆகிறீர்கள்" என்றார் புத்தர்.

தங்களுடைய சுய ஆற்றலில் அல்லது வெற்றியில் நம்பிக்கை வைத்தவர்கள். உயர்நிலையை அடைந்திருக்கிறார்கள்.

உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கைச் சரிதங்களைப் படித்துப் பாருங்கள். அது உண்மையென்பது தெரிய வரும்.

"உங்கள் மனதில் கருக்கொள்ளும் எண்ணத்தை நீங்கள் உருப்பெறச் செய்ய முடியும்"

பணமாகட்டும், கல்வியாகட்டும், வேறு எதுவாகட்டும், ஒன்றை முழு மனதுடன் விரும்புகிறபோது, தீவிரமாக நம்புகிற போது, அதை நீங்கள் பெற்றே தீருவீர்கள்.

"உலகிலேயே வலிமையான சக்திகளில் ஒன்று தம் குறிக்கோளின் மீது நாம் வைக்கிற தீவிர நம்பிக்கையாகும்"

'ஜோன் ஆஃப் ஆர்க்' என்கிற ஆடு மேய்க்கும் சிறுமி. தான் ஃப்ரான்ஸின் படைகளுக்கு தலைமை தாங்கிச்சென்று இங்கிலாந்துடன் போர் செய்யப் போவதாக நம்பினாள்.

அப்போது அவளுக்கு வயது பன்னிரெண்டு. நாளுக்கு நாள் அந்த நம்பிக்கை அவளுக்குள் வளர்ந்து கொண்டே வந்தது. (தொடரும்)

# நாடார் மறுமலர்ச்சி

### நாடார்களுக்கு எதிரான கலவரங்கள்

**கமுதிக் கலவரம்**

1918இல், கமுதி நாடார் வியாபாரிகள் விலைவாசியை ஏற்றி விட்டார்கள் என்ற பகை உணர்வு மறவர்களுக்கு இருந்தது. கமுதி சந்தை வளாகத்தில், நாடார் கடைப் பகுதியை மற்ற சமூகத்தினர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டனர். இதனால், கமுதியில் கலவரம் எழுந்தது. இருதரப்புத் தலைவர்களும் பஞ்சாயத்துக் கூட்டினர். நாடார்கள் முதலில் சண்டையை ஆரம்பித்தனர் என்று அபராதம் விதிக்கப்பட்டது. இந்த கலவரத்தைப் பெரிதுப்படுத்தி, நாடார்களை ஒடுக்குவது என்று மற்ற ஜாதியினர் முடிவெடுத்தனர். 1918 செப்டம்பர் 17இல் கமுதி நாடார்கள் கொள்ளையடிக்கப்படுவார்கள் என்று வெள்ளைச்சாமித் தேவரின் மகன் விக்கிரபாண்டித் தேவர் பகிரங்கமாக அறிவித்தார். இந்த அறிவிப்பைப் பற்றி நாடார்கள், அரசு அதிகாரிகளுக்கு தந்தி கொடுத்தனர். பலத்த போலீஸுடன் இன்ஸ்பெக்டர் கமுதிக்கு வந்தார்.

அறிவித்த நாளில், தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருந்த கொள்ளையர் கூட்டத்தை போலீஸார் விரட்டினர். கூட்டம் கல்லெறிந்து தாக்கியதில் 5 போலீஸார் காயமடைந்தனர். கூடுதலாக, ஆயுதப் போலீஸ் அனுப்பும்படி இன்ஸ்பெக்டர் கோரினார். உடனே வந்த ஆயுதம் ஏந்திய போலீஸார், வீதியெங்கும் நிறுத்தப்பட்டனர். அப்போது 1000க்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் நாடார் கடைகள், வீடுகளில் புகுந்து கொள்ளையடித்து, தீயிட்டு நாசப்படுத்தினர். அவர்களைப் போலீஸார் சுட்டனர். இதில் 50 கொள்ளையர்களும், 2 போலீஸாரும் உயிரிழந்தனர். 3 போலீஸார் படுகாயமடைந்தனர். இதில் நாடார் உயிரிழப்பு எவ்வளவு என்று சரிவரத் தெரியவில்லை. 40 நாடார் கடைகளும், வீடுகளும், ரூ.60,000 மதிப்புள்ள சொத்துக்களும் நாசமாயின.

**ஆங்கிலேய அரசின் தடுப்பு நடவடிக்கை**

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், மேலும் கலவரம் பரவாமல் தடுக்கவும், 1918 அக்டோபரில், கலகக் காரர்களைத் தண்டிக்கும் அதிகாரம் கொண்ட 100 சிறப்புப் போலீஸார் கமுதியில் நிறுத்தப்பட்டனர். நாசமான சொத்துக்களைச் செப்பனிடவும், சிறப்பு போலீஸைப் பேணுவதற்கும் நகரமக்கள் அனைவருக்கும் வரி விதிக்கப்பட்டது. இந்த வரியை 1922இல், முதல் நாடார் எம்.எல்.சி.யாக நியமனமான டபிள்யூ.பி.ஏ.சௌந்திரபாண்டியனார் முயற்சி செய்து நீக்கினார்.

**கருத்துச் சுருக்கம்**

நாடார்களின் பொருளாதார முன்னேற்றம் மற்ற ஜாதியினரிடம் பொறாமையை ஏற்படுத்தியது. முன்னேற்றம் கண்ட நாடார்கள், சமூகச் சீர்கேடுகளுக்கு எதிராக ஒன்றுபட்டு குரல் கொடுக்க ஆரம்பித்தனர். ஒடுங்கிக் கிடந்த நாடார்கள் விழித்தெழுவதை அடக்கும் எண்ணத்துடன் மற்ற ஜாதியினர் நாடார்களுக்கு எதிராக திரண்டனர். பல்வேறு பெருநகரங்களில் இந்த கலவரங்கள் வெடித்தன. நாடார்களின் பொருளாதார நிலைகளுக்கு எதிராக வெடித்த இந்த கலவரங்களில், அருப்புக்கோட்டைக் கலவரம் முதலாவது. இதில், நாடார்கள் வெறும் பார்வையாளர்கள்தான். அரசின் உதவி இல்லை. அடுத்து, 1899இல் ஏற்பட்ட சிவகாசிக் கலவரம் மிகவும் பயங்கரமானது. சிவகாசி மட்டுமின்றி சுற்றுப் பட்டிகளிலும் பல வாரங்களாக நீடித்தது. இதில் சிவகாசி நாடார்கள் கொஞ்சம் எதிர்த்து சமாளித்துள்ளனர். ஆரம்பத்தில், அரசின் உதவி இல்லை. ஆனால், கலவரத்தை அரசு ராணுவத்தின் உதவியுடன் நிறுத்தியது.

இதில் நாடார்கள் இழப்பு 400 உயிரும் 4 லட்ச ரூபாயும். மீண்டும் இக்கலவரங்கள் வெடிக்காத வண்ணம், போலீஸ் நிர்வாகத்திலும், கிராம நிர்வாகத்திலும் பல மாறுதல்களை அரசு செய்தது. நாடார்களும் கலகக்காரர்களுக்குப்புரியும் மொழியில் (கொலை, கொள்ளை) பதில் பேச ஆரம்பித்தனர். மூன்றாவதாக, கமுதியில் 1918இல் நாடார்களுக்கு எதிராகக் கலவரம் வெடித்தது. இதில், அரசின் உதவி முழுவதுமாக இருந்தது. கலகக்காரர்கள்தான் கொல்லப்பட்டனர். கலவரச் சேதத்தை சரிக்கட்டுவதற்கு அனைத்துத் தரப்பினரும் வரி கொடுத்தனர். இந்த மூன்று கலவரங்களைப் பார்க்கும்போது, நாடார்களுக்கு அரசின் உதவியும், கலகக்காரர்களை சமாளிக்கும் திறனும் படிப்படியாகத் தொடர்ந்து கூடியது தெரிகிறது.

(தொடரும்)


EAGLE PRESS

"DIARY HOUSE"
Ph : 25952694

35, M.S. Koil Street, Chennai-13.
Tamil Nadu
email: eagle@giamd01.vsnl.net.in
Website : www.eaglepressgroup.com

ஸ்ரீ முருகன் ஜோதிட நிலையம்



வாக்கிய பஞ்சாங்கப்படி கம்ப்யூட்டர் ஜாதகம் கணித்து தரப்படும். உங்கள் எதிர்காலம், படிப்பு, உத்தியோகம், தொழில், திருமணம் எப்போது என்ற நிலை அறிய உடனே அணுகவும். ஜாதக ரீதியாக தோஷ நிவர்த்தி பரிகாரங்கள் சொல்லப்படும். மனையடி வாஸ்து சாஸ்திரமும் பார்க்கப்படும். உங்கள் மகளுக்கோ, மகனுக்கோ உடனே திருமணம் நடைபெற எங்களை நாடுங்கள். R.C, CSI மற்றும் இந்து நாடார், படித்த படிக்காத VIP பட்டதாரிகள், விதவைகள், ஜாதகங்கள் ஏராளமாக உள்ளன. இது அனைத்து நாடார் சமூகத்துக்கு மட்டும். ஆலோசகர் P.R.ராஜகோபல் நாடார், சேவைக் கட்டணம் நேரில்.

ஸ்ரீ முருகன் திருமண தகவல் நிலையம்

25/1, புதிய எண்:16, கிரி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033. செல்:9841239324.

# வாழ்த்து செய்தி

## S. Vaikundarajan அவர்கள்

Keeraikaranthattu, Mahadevankulam P.O Tisaiyanvilai (via).,
Tirunelveli Dt-627 657, Tamilnadu, India.
Tel: off: 04637-271202. 273202, Fax: 04637-272802. E-mail:
vaikundarajan@vvgroup.biz



இளமையில் தேச (விமானப்படை) சேவை. பணி ஓய்வு பெற்ற பிறகு சமுதாய சேவை என என்றும் இளமையாக இருந்து நாடார் சமுதயத்தினர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக விளங்கும் பெரியவர் திரு.ஜூலியன் நாடார் அண்ணாச்சி அவர்கள் நடத்தும் நாடார் முரசு பத்திரிக்கை தீபாவளி சிறப்பிதழ் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி.

கெட்ட அசுரனை கொன்ற நிகழ்வையே தீபாவளியாக கொண்டாடுகிறோம். என்பது நம்பிக்கை. நம் இளைஞர்களும் நம்மிடம் இருக்கும் கெட்ட பழக்கவழக்கங்களை வருடத்திற்கு ஒன்றாக குறைத்தால் சேர, சோழ பாண்டிய வம்சம் மீண்டும் தழைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பெரியவர் ஜூலியன் நாடார் அண்ணாச்சி போன்றவர்கள் வழி நடத்துதலில் நம் சமுதாய இளைஞர்கள் தொழிலில், கல்வியில் அரசியலில் என எல்லா துறைகளிலும் வளர்ச்சி பெற வேண்டும். தன்னலம் கருதாது பொது நலத்தோடு செயல்படும் அண்ணாச்சி போன்றவர்கள் வழிகாட்டுதலை சரியாக உபயோகப்படுத்த வேண்டியது சமுதாய இளைஞர்களின் கடமை. அண்ணாச்சி அவர்களின் வழியை பின்பற்றுபவர் நிச்சயம் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவார்கள்.. ஏனென்றால் அவர்களிடம் எந்த தீய பழக்கங்களும் கிடையாது. யாரும் தீங்கு செய்வதும் கிடையாது. நாடார் முரசு பத்திரிகை வாசகர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

GP கோபால் பிளாஸ்டிக்

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33


S.இராஜகோபால்

RS பிளாஸ்டிக்

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.


S.ஜெயராஜ்



THE TINNEVELLY

# DAKSHINA MARA NADAR SANGAM

(Registered under Societies Registration Act XXI of 1860 as S.No. 6 of 1948)
No. 70, Salai Street, SINDUPOONDURAI,
TIRUNELVELI - 627 001.

e_mail : dmnsnellai@gmail.com
Off : 0462 - 2333202
Cell : 94453 71202



| R.K. KALITHASAN NADAR | T. RAJAKUMAR NADAR | A. SELVARAJ NADAR |
|---|---|---|
| President | Secretary | Treasurer |
| Cell : 94437 10927 | Cell : 98408 30333 | Cell : 93667 01196 |

Date : 20.10.2023

## வாழ்த்து

பெறுநர்:-

திரு. **ஜுலியன் நாடார்** அவர்கள்
பேராசிரியர்
இந்தியன் நாடார் முரசு
புதிய எண். 1, ப.எண். 21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு,
மேட்டுப்பாளையம், மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் - 044-23810610

அன்புடையீர், வணக்கம்!

தாங்கள் **"இந்தியன் நாடார் முரசு மாத இதழ்"** பத்திரிகை நடத்திவருவது மிகவும் பாராட்டுக்குரியது. இதழில் பெருந்தலைவர் காமராஜரின் வரலாற்று நிகழ்வுகள் பற்றியும், நாடார் சமுதாயம் பற்றிய வரலாற்று உண்மை நிகழ்வுகள் பற்றியும், சமுதாய நிகழ்ச்சிகள் பற்றியும், நமது சமுதாயத்தில் வரன் தேடுவோருக்கு மணமாலை நிகழ்வுகளையும், நமது சமுதாயத்தில் உழைப்பால் உயர்ந்த தொழில் அதிபர்களின் உரையாடல்கள் பற்றியும் பதிவிட்டுவருவது அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. நமது சமுதாயத்தில் இருந்து வரும் அனைத்து பத்திரிகைக்கும் முன்னோடியாக தங்களது பத்திரிகை திகழ்கிறது.

தங்களுக்கு எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்தியன் நாடார் முரசு வாசகர்கள் அனைவருக்கும் என் **"இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களையும்"** தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி.

R.K. காளிதாசன் நாடார்
தலைவர்
திருநெல்வேலி தெக்ஷண மாற
நாடார் சங்கம்.




S.K.இராகவன் **இராஜா ஏஜென்சி**

Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials

பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு,
இராமாபுரம், சென்னை-89

**Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824**

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-7

இத்தலைப்பில் எழுதப்பெற்றுவரும் தொடர் கட்டுரைகளில் இதுவரை மானாடு எனும் மானவீர வளநாட்டுப் பகுதியில் கி.பி.1600 ஆண்டிலிருந்து அமைந்துவந்த சான்றோர்குல நாடார்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்று ஆவணங்களிலிருந்து அவர்தம் சிறப்புகள் வெளிப்படுத்தப் பெற்றமை யாவரும் அறிவர்.



கி.பி.1623 ஆண்டில் அமைந்த பெருமாள்சாமி தம்பிரான் என்ற சான்றோர்குல வைணவ அதிகாரி பற்றி இந்தியன் நாடார் முரசின் செப்டம்பர் மாத இதழிலும் அவர் கூட்டத்தாரில் சிலர் வழிபடும் அந்திரமுடையார் பற்றி அக்டோபர் மாத இதழிலும் எழுதியிருந்தேன்.

பெருமாள்சாமி தம்பிரானின் மெய்க்காவலரில் ஒருவரும் தம்பிரானுடன் அனந்தன்காட்டில் இறுதிவரை தங்கியிருந்தவரும் குஞ்சாலி, குட்டியாலி மரக்காயரின் படையால் கைதுசெய்யப்பெற்றுக் கடலில் பயனித்தபொழுது தனியொருவராக நின்று அத்தனைப் படைவீரர்களைக் கொன்றவருமான கபாலக்காரனைச் சான்றோர் குலத்தவர் பலர் வழிபட்டுவருகின்றனர்.

வள்ளியூரில் பிரான்மலைக் கொள்ளையரைத் தனியொருவராகக் கொன்றும் விரட்டியுமடித்து அவ்வூர் மக்களைக் காப்பாற்றித் தெய்வமாக வழிபடப்பெற்று வரும் அந்திரமுடையாருக்கு இணையானவரே இக்கபாலக்காரன் ஆவார்.

மானவீர வளநாட்டுப் பகுதிகளிலும் மற்றும் குடியேற்றப் பகுதிகளிலும் வழிபட்டுவரும் இவ்வனைத்துச் சான்றோர்குல மூதாதையர் பற்றிய முழுமையான சமூகப் பண்பாட்டு வரலாறு அருதனக் குட்டிப் புலவராலும் அவருடைய சீடர்களாலும் ஆவணப்படுத்தப் பட்டிராவிட்டால் நாம் நம் வரலாற்றின் ஒரு பகுதியை இழந்திருப்போம்.

இவர்களைத் தொடர்ந்து மானாட்டின் வடபற்று நாடாதி நாடாக்கள் மற்றும் சான்றோர்குலப் பிரபுக்கள் வர்க்கமான பதினேழு ஆட்சியாளர்களையும் அவர்களின் சமூகப் பண்பாட்டு வரலாறுகளையும் பதிவிடுவது இன்றியமையாதது ஆகும். இவர்கள் அப்பகுதி நிலவுடைமைச் சமூகத்தினராகவும் இருந்துள்ளனர்.

இவர்களைப் பற்றிய கல்வெட்டு மற்றும் செப்பேடுகள், பிற ஆவணங்கள் கி.பி.1639ஆம் ஆண்டினதாகவும் அதற்குச் சற்றுமுன்பும் பின்பும் அமைந்து சான்றோர் குலத்தவரின் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளதாகத் தெரிகிறது. இதே ஆண்டில் வீரப்பநாடான் பெயரில் வில்லுப்பாட்டு ஒன்றும் ஏற்பட்டுள்ளது.

கி.பி.1639ஆம் ஆண்டில் ஏற்பட்ட இக்கல்வெட்டு ஆவணம் தூத்துக்குடி மாவட்டம் மானவீர வளநாட்டு (மானாட்டு) முத்துக்கிருஷ்ணாபுரம் (அதாவது திருச்செந்தூர் அருகில் வீரப்ப நாடான் குடியிருப்புப் பகுதியில் எள்ளுவிளையில் அமைந்துள்ளது. இதனைத் தேரிக் கல்வெட்டு என்றே குறிப்பிடுகின்றனர்.

இக்கல்வெட்டை முன்பு மைப் படிவமாகப் படியெடுத்த இந்திய தொல்லியல் துறையினர் பின்பு தொல்லியல் அறிக்கை எண் பி306/1963-64 எனப் பதிவிட்டு வெளியிட்டுள்ளனர். ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற சிறு குறிப்பில், திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, குதிரைமொழி கிரேஸ் எலிமென்டரி ஸ்கூல் அருகிலுள்ள ஊரில் இக்கல்வெட்டுத்தூண் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கி.பி.17ஆம் நூற்றாண்டின் மையத்தில் தென்பாண்டி நாட்டுத் தென் கிழக்குப்பகுதியில்

டாக்டர் ஆ.தசரதன் 9444169603.

சான்றோர்குல நாடார்கள் நாடாண்டனர் என்பதற்கான முக்கிய ஆதாரமான இக்கல்வெட்டு வெள்ளைக் கல்தூண் ஒன்றில் நான்கு பக்கங்களிலும் வெட்டப்பெற்றுள்ளது. முதல் பக்கத்தில் அம்மன் சிலை உள்ளது. ஓர் இனத்தார் இந்த அம்மனை வழிபட்டு வருகின்றனர்.

ஏறத்தாழ 384 ஆண்டுகளாக இயற்கையின் பாதிப்பால் சிதைந்து சிதைந்து இன்று படிக்க இயலாமலும் படியெடுக்க முடியாமலும் உள்ள இக்கல்வெட்டின் மைப் படிவத்தை எழுத்தில் எழுதி மைசூரில் பாதுகாப்பாக வைத்ததின் நகலை அண்ணாச்சி நெல்லை நெடுமாறன் அவர்கள் அங்குச் சென்று அரிதின் முயன்று பெற்று என்னிடம் தந்திருந்தது ஒரு புண்ணியமாகும்.

இந்தியன் நாடார் முரசின் 2013- 2014 ஆம் ஆண்டுகளின் மாத இதழ்களில் இக்கல்வெட்டை "நெல்லை நெடுமாறன் வரவால் தகர்க்கப்பட்ட தமிழக வரலாறு" என்ற தொடர்கட்டுரைகளின் நடுவே பதிவிட்டிருந்தேன். முதற்கண் அண்ணாச்சி ஜூலியன் நாடார் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

குதிரைமொழித் தேரிக் கல்வெட்டைப் படித்து முதன்முதலாக 1918ஆம் ஆண்டு திரு.பி.ஜெ.எம்.குலசேகர ராஜ் அவர்கள், மதுரையில், மகாசன சங்கத்தில் நாடார் குல வரலாறு என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றி நூலாக வெளிவிட்டுள்ளதில் ஓரிடத்தில் கல்வெட்டுச் செய்திகளைப் பதிவிட்டுள்ளார்.

அடுத்ததாக, 1931ஆம் ஆண்டில் பேராசிரியர் தா.மாசில்லாமணி நாடன் அவர்கள் பாண்டியதேச ஆதித்த வம்ச வரலாறு என்ற தம் நூலில் மேலும் விரிவாகக் காயாமொழி ஆதித்த நாடன்களைப் பற்றிய வரலாற்று நூலில் எழுதியுள்ளார். இந்நூலை இருமுறை நான் மறுபதிப்புச் செய்துள்ளேன்.

கி.பி.1937இல் இராமலிங்கக் குருக்களும் பெருநாழி கவிஞர் வெ.ஆ.குமரய்ய நாடனும் இணைந்து எழுதிய நாடார் மன்னரும் நாயக்க மன்னரும் என்ற நூலிலும் தேரிக் கல்வெட்டுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இதே ஆண்டில் வெ.ஆ.குமரய்ய நாடன் பெருநாழியிலிருந்து நடைப் பயணமாகக் காயாமொழி சென்று அங்கிருந்த ஆதித்த நாடன்கள் முன்னிலையில் காயாமொழி ஆதித்தன் திருமுகவிலாசம் என்ற நூலைப் பாடிப் பரிசுபெற்றுள்ளார். இந்த நூலிலும் மேற்குறிப்பிட்ட தேரிக்கல்வெட்டுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இந்த நூலை 2019ஆம் ஆண்டில் நான் புத்தாக்கம் செய்து வெளியிட்டபொழுதும் நிறையச் செய்திகளை எழுதியுள்ளேன். கி.பி.1980இல் தென்காசி அண்ணாச்சி செல்வராஜ் நாடார் அவர்கள் தாம் எழுதிய நாடார்களின் பூர்வீக வரலாறு எனும் நூலிலும் தேரிக்கல்வெட்டுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

நெல்லை நெடுமாறன் அவர்கள் எழுதி நான் 2020 ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்ட நாடார்களின் நாடுகள் என்ற நூலின் 15,16ஆம் பக்கங்களில் இக் கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் நாடன்கள் நிலவுடைமைச் சமூகத்தினர் என அண்ணாச்சி நெடுமாறன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளவு பேர்களும் எழுதினாலும் யாரும் இக்கல்வெட்டை முழுமையாகப் பதிவிடவில்லை. 2021ஆம் ஆண்டில் நான் எழுதி வெளியிட்டுள்ள நிலைமைக்காரர் எனும் பிற்கால மூவேந்தர் தொகுதி இரண்டில் 20 முதல் 25ஆம் பக்கங்களில்

இக்கல்வெட்டையும் பின்பு அதன் விளக்கத்தையும் எழுதியுள்ளேன்.

ஓய்வுவெற்ற ஓவிய ஆசிரியர் ஆறுமுகநேரி முனைவர் தவசிமுத்து மாறன் அவர்கள் அண்மையில் கட்செவியில் இக்கல்வெட்டை வழங்கியிருக்கிறார் என்பதையும் பதிவுசெய்வது கடமையாகும்.

பலரும் பலவிதமாக ஆய்வு செய்திருந்தாலும் அப்பகுதியை நன்கு அறிந்து ஆய்வுசெய்து, இக்கல்வெட்டுச் செய்தியை நெல்லை நெடுமாறன் அவர்கள் பார்வையில் கீழ்க்காணுமாறு வழங்குவது சிறப்பாகும். (பார்க்க: பக்கம் 115) அவர் எழுதுவதாவது: திருமலை நாயக்கர் தலைமையையும் வேளாளர் தலைமையையும் ஏற்றுக்கொண்ட வடபத்து நாடாதி நாடாக்கள் இராசகுலவரான நிலைமைக்காரர்கள். நாயக்கர் ஆட்சியில் அவருக்கு அடங்கியிருந்தாலும் கல்வெட்டில் தங்களை அரச குலத்தவர் என்று அடையாளம் காட்டிட நாடாதி நாடாக்கள் என்று அழைத்துக் கொண்ட இப்பிரபுக்கள் மானவீர வளநாட்டின் வடபத்தில் உயர்ந்த சிறப்புக்களோடு வாழ்ந்துள்ளனர். சர்வசாதி குடி சனங்களின் மீதும் விரிவிதித்து அதிகாரம் செய்யும் ஆற்றல் உள்ளவர்களாகவும் வரியை விதிக்கவும் விலக்கவும் இவர்களே உரிமை பெற்றிருந்தார்கள். நாடென்ற மரியாதையை விசய நகரம் இவர்களுக்கு அளித்திருந்ததுபோலும். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் இம் மரபினரிடம் இன்றவும் நிலவுடைமையாக இருந்து வருகிறது. கிராம மரியாதை என்பதைக் காயாமொழி ஆதித்த நாடன் கால்வழி நாடாக்கள் இன்றளவும் தக்க வைத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். கி.பி.1639இல் அமைந்த கல்வெட்டில் 1.ஆதித்த நாடன். 2).கோவிந்தப் பணிக்க நாடன் 3.வீரப்ப நாடன் 4).தீத்தியப்ப நாடன். 5.பிச்ச நாடன். 6.அய்யக்குட்டி நாடன். 7.திக்கெல்லாம்கட்டி நாடன்.8.நினைத்தது முடித்த நாடன். 9).அவத்தைக்குதவி நாடன், 10)குத்தியுண்டா நாடன் என்போர் நிலவுடைமைச் சமூகத்தின் எச்சமாகச் சுட்டிக்காட்டப் பெறுகின்றனர்.

இப் பத்து ஆட்சியாளர்களும் இவர்களுக்கு முன் அப்பகுதியை ஆட்சிசெய்த நாடாள்வாரான நிலவுடைமைச் சமூகத்தினரும் சான்றோர் குலத்தினர் ஆவர். இவர்களில் சில முக்கந்த நாடாக்களும் பல நிலைமைக்காரர்களும் உள்ளனர் என நெல்லை நெடுமாறன் அவர்கள் தம் ஆய்வில் (பக்.117) குறிப்பிட்டுள்ளார். 1.வெட்டி ஆண்டான். 2.சிம்மங்கரையான் என்ற சிமிளி 3.பின்னங்கரையான் 4.குமாரக் கரையான் 5.அத்திப் பெரியவன், 6.அறம் வளர்த்தாண்டான். 7.சரவணப் பெரியவன். இவர்கள் முதலில் இசுலாமியர்க்கும் பின்பு நாயக்களுக்கும் பிற்காலத்தில் அடங்கி ஆட்சி செய்துள்ளனர். இவர்களுடைய பகுதிகளைக் கரைச் சுற்று நாடுகள் என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. இவர்களையும் பிரபுக்கள் என்றும் தண்டிகைக்காரர் என்றும் மக்கள் அழைத்துள்ளனர். இவர்களை வென்றே முன்பு கூறப்பெற்ற பத்து நாடாதிநாடாக்களும் கி.பி.1639 இல் ஆட்சி அதிகாரம் ஏற்றுள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர்.

பேராசிரியர் தா.மாசில்லாமணி நாடன் எழுதியுள்ள நூலில் காயாமொழி ஆதித்த வமிசாவளி தொடக்கத்திலிருந்து 1930வரை பட்டியலிடப்பட்டுள்ளது. அவர்கள் வரலாறும் விரிவுடன் பதிவாகியுள்ளது. கோவிந்தப் பணிக்க நாடனின் வரலாறோ வமிசாவளியோ பதிவு செய்யப்பெற்றிருந்தால் சிறப்பாகும். ஆனால் பணிக்க நாடான் மரபினர் பலர் சில ஊர்களில் வாழ்ந்து சிறப்புற்றிருக்கின்றனர். இவர்களுடைய பூர்வீகம் அறியப்பட்டு எழுதப்பெறவேண்டும். தீத்தியப் நாடனின் வமிசாவளி பற்றியும் பதிவிடப்படவேண்டும். தீத்தியப்பன் பற்றிச் சில வழக்காறுகள் உள்ளன. பிற நாடாள்வார் பற்றி அதிகமாக அறியப்படவில்லை. பின்னங்கரையான் வமிசாவளியில் வந்த பின்னைக்குளம் சிவனணைந்த நாடான் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி, ஆலயத்தின் மேலக்கோபுரம் கட்டுவதற்கு உதவிய செய்தி அங்குப் பொறிக்கப்பட்டிருப்பதைத் தொல்லியல் அறிஞர் எஸ்.இராமச்சந்திரன் அவர்களும் அரசு ஊழியரான செல்வனும் கண்டறிந்ததாக நெல்லை நெடுமாறன் (பக்.117) குறிப்பிட்டுள்ளார்.

பத்துப் பங்குகளை நிருவகித்தவர்களில் வீரப்ப நாடன் பற்றி விரிவாக எழுதப்பெற வேண்டிய தேவை உள்ளது. கி.பி.1639க்கு முன்பு நாடாள்வார் சிலர் மீனவர்களிடமிருந்து வென்றெடுத்த சொத்துக்களைப் பங்கு வைப்பதில் ஏற்பட்ட பிரிவினையே ஆதித்த நாடன் தலைமையிலான அணிக்கு ஆட்சி மாறியதாகத் தெரிகிறது. வீரப்ப நாடன் அங்கும் உள்ளார். இங்கும் உள்ளார். அவர் ஆதித்த நாடனை வெட்டி விட்டு வெளியேறியதாகக் கூறப்படுகிறது. ஆனால் வீரப்ப நாடான் மீது பாடப்பெற்ற வில்லுப்பாட்டு சற்று வேறுபட்டு அமைந்துள்ளது.

கி.பி.1639லியே ஆலங்குளம் (தென்காசி அருகில்) பகுதியில் பாடப்பெற்ற இவ்வில்லுப் பாட்டு 1639க்கு முன்புள்ள வரலாற்றையும் பின்புள்ள வரலாற்றையும் தெரிவிப்பதால் அந்த ஆவணத்தையும் நாம் அவசியம் கருதிப்பார்க்கவேண்டும். தொடரும்.....




## கண்ணீர் அஞ்சலி



கண்ணீர் அஞ்சலி திருமதி.ஜெயலட்சுமி முனுசாமி நாடார் திரு.எம்.என்.ராஜா அவர்களின் தாயார் மரண செய்தி கேட்டு வருந்துகிறோம்

ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறோம்.

விலைகுறைவு! R.Suresh Ph: 2226 6961, 22266962 மனநிறைவு!

# AMUTHA & CO



Sony, L.G, TCL, SamSung, Onida,Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar,Kelvinator,Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells

1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.






R.S.SANTHANAM

Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai

R.S.SANTHANAM

## ரேவதி ஹார்டுவேர்ஸ்

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.


2வருடங்களுக்கு பிறகு மீண்டும் புது பொலிவுடன் நவம்பர் மாதம் முதல் ஆரம்பம். தொடர்புக்கு: 9840948727.

## அமிர்தகனி

## திருமண தகவல் நிலையம்

நாடார் சமூகத்திற்கு மட்டும்

இந்து நாடார், சி.எஸ்.ஐ, ஆர்.சி, மறுமணம், மாற்றுத்திறனாளி, உடல் ஊனமுற்றோர் உட்பட அனைவருக்கும்

18,13வது குறுக்கு தெரு, முத்தமிழ் நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை-53.


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

# VIJAY TRADERS



## Jaggery Merchant

207, Kamarajapuram, I main Road, Nungambakkam, Chennai-34.

ph:28170441, 28174947, 28170054, 9444012267, 9884190012. 8939381333.

India's No. 1 Dealer
VASANTH & CO



4612
S.No......................

26-10-2023

# வசந்த் & கோவின்

## *இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்*

சைதை நாடார் சங்கத்தின் 38-ஆம் ஆண்டு விழா நடைபெறுவதை அறிந்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

38-ஆம் ஆண்டு விழாவிற்கு பெருமை சேர்க்க மலர் வெளியிடுவது சைதை நாடார் சங்கத்தினருக்கு புகழ் சேர்ப்பதாக அமையட்டும்.

சென்னைவாழ் நாடார் சமுதாய மக்களின் நலனில் அக்கறை கொண்ட நாடார் முரசு பத்திரிக்கைக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

பிறந்த மண்ணின் பெருமையை போற்றுவதற்காகவும், சமுதாய ஒற்றுமையை பேணிக்காக்கவும், இந்திய மக்கள் ஒன்றுக்கூடி கொண்டாடும் இந்த தீபாவளி மகிழ்ச்சி திருவிழாவாக அமையட்டும்.

உழைப்பால் ஈட்டிய பொருளால் இன்பம் பொங்கும் தீபம் ஏற்றுவோம், புனிதன் காமராஜ் ஏற்றிய "அறிவொளி" போற்றி கல்லாமை இருள் அகற்றுவோம்.

இந்தியர் அனைவருக்கும் இன்பம் பொங்கும் "தீப ஒளி" திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

அன்புடன்

**நிர்வாக இயக்குநர்கள்**

தமிழ்செல்வி வசந்தகுமார், தங்கமலர் ஜெகநாத்

விஜய்வசந்த், எம்.பி., வினோத் வசந்தகுமார்



Vasanth
Corporate Office : No. 14, Railway Border 1st Street, Kaveri Nagar, Saidapet, Chennai - 600 015.
044 - 42 444 440.
: 93335 93335
www.vasanthandco.in
/Vasanthandco
/Vasanthandco_in
/Vasanthandco_in
SINCE 1978



Regd. No.56/146/2011/PPS - 1 வீரம்! விவேகம்!! வெற்றி!!!

# பெருந்தலைவர் மக்கள் கட்சி

37, 100 அடி ரோடு, முதல் அவென்யூ, அசோக்நகர், சென்னை - 600 083.
Ph: 044-2489 9110 - 111, Fax: 044-2489 9011
E-mail: ptmk11@gmail.com / website: www.ptmk.in

தலைவர்
**N.R.தனபாலன்**


## வாழ்த்து செய்தி !

1985-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு முறைப்படி 1986-ம் ஆண்டில் பதிவுத்துறையில் பதிவு செய்யப்பட்ட சைதை நாடார் சங்கம் கிண்டி, மடுவங்கரை, வேளச்சேரி, மடிப்பாக்கம், ஈக்காட்டுத்தாங்கல் எம்.ஜி.ஆர்.நகர், அசோக்நகர் போன்ற பகுதிகளை உள்ளடக்கி சுமார் 1200-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டதாக இருந்தது.

நாளடைவில் ஆங்காங்கே புதிய புதிய நாடார் சங்கங்கள் தொடங்கப்பட்டு, இன்று சென்னையின் மைய பகுதியான சைதாப்பேட்டையில் உள்ள நாடார்களால் மட்டும் செயல்பட்டு வரும் சைதை நாடார் சங்கத்தில் சுமார் 300-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்து வருகிறார்கள்.

சென்னையின் பழமைவாய்ந்த சங்கங்களில் ஒன்றான சைதை நாடார் சங்கத்தில் தொழில் அதிபர்களும், முன்னாள் இன்னாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கோலோச்சிய சங்கம் இது. சென்னையில் உள்ள மற்ற நாடார் சங்கங்களை போல் பெரிய அளவில் திருமண மண்டபங்கள், பள்ளி, கல்லூரிகள் என்று இல்லாவிட்டாலும், சங்கம் நடத்துவதற்கான இடமும் கட்டிடமும் சைதாப்பேட்டை மெயின்ரோட்டில் அமைந்திருப்பது பெருமைக்குரியது.

இருந்தபோதிலும் செங்கல்பட்டுவை அடுத்து GST சாலையில் 3 கிரவுண்ட் இடம் சைதை நாடார் சங்கத்திற்காக வாங்கப்பட்டுள்ள செய்தி பெரும் மகிழ்ச்சியளிக்கிறது.

சமுதாய உணர்வுகள் மங்கிவரும் நம் இளைஞர்கள் மத்தியில் 38-வது ஆண்டு விழா கொண்டாடும் சைதை நாடார் சங்கத்தில் சைதை நாடார் இளைஞர் அணியினர் என்னும் துணை அமைப்பை தொடங்கி இருப்பதை பாராட்டி வரவேற்கிறேன். சைதை நாடார் சங்கத்தின் வழித்தோன்றலாய் வரும் இளைஞர் அணியினர் புதிய பரிணாம வளர்ச்சி பெற்று சைதை நாடார் சங்கத்தில் சைதைப்பகுதியில் உள்ள நம் சமுதாய இளைஞர்களை உறுப்பினர்களாக்கி சங்கத்தின் பெரும் வளர்ச்சியை உறுதி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

38-வது ஆண்டு விழா கொண்டாடும் சைதை நாடார் சங்கம், தங்களுக்கென திருமண மண்டபமும், பெருந்தலைவர் காமராஜர் கண்ட கனவை நனவாக்கும் விதமாக பள்ளிகள், கல்லூரிகள் தொடங்கி வசதியற்றோரையும் கல்வி கற்க செய்யும் பாலமாக செயல்பட வேண்டும் அதற்கு நானும் உங்களுடன் என்றென்றும் துணை நிற்பேன் என்று கூறி வாழ்த்துகிறேன்.

மிக்க நன்றி !

என்றும் உங்களுடன்

என்.ஆர்.தனபாலன்

# வா...வியாபாரி ஆகலாம்

**அமுதா B.பாலகிருஷ்ணன்**

8. தலைக்கனம் கூடாது.

தினவெடுத்த மாடு, மரம், சுவர், செத்த...இப்படி எதிலாவது உரசிக்கிட்டே போகும்.

திமிர் பிடிச்சவனும் யாருகிட்டயாவது, எதுக்காகவாவது உரசிகிட்டேயிருப்பான்.



"தான் செய்யிறதுதான் சரி, மத்தவன்லாம் மடப் பசங்க-" ங்கிற எண்ணம் இருந்து கொண்டேயிருக்கும்.

இந்த எண்ணம் வியாபாரத்தைக் கத்துக்கவிடாது. மற்றவங்களையும் ஒழுங்கா வியாபாரத்தைப் பண்ண விடாது.

"ஏய்... அத அப்படிச் செய்யாத... இத இப்படிச் செய்யாத"-ன்னு எதையாவது ஏட்டிக்குப் போட்டியா வம்பு பண்ணிகிட்டேயிருக்கச் சொல்லும்.

அதனால வியாபாரம் தடைப்படும்.

தொழில் கத்துக்க வந்த நமக்கு "டாமினேஷன்" எதற்கு...? பணிந்தவன், பாதம் பார்ப்பான் நிமிர்ந்தவன், (நெற்றியைப்) பதம் பார்ப்பான் (அதாவது நெற்றியில் இடித்துக் கொள்வான்.

பாதம் என்பது அடிவரை, அதாவது அடித்தட்டு வரைக்கும் போய், வியாபாரம்னா என்ன, தொழிலை எப்படிப் பண்ணணும்ங்கிற நுணுக்கங்களையெல்லாம் கத்துக்குவான்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து"-

என்கிறார் திருவள்ளுவர்.

(பெருமை அடைய விரும்புபவர், தலைக்கனமின்றி அடக்க ஒடுக்கமாக இருப்பர், சிறுமை, தன்னை வியந்து தெனாவெட்டாத்தான் நடக்கும்)

தலைக்கனம் பிடித்தவன் மற்றவர்களைக் குறை சொல்வதிலேயே குறியாக இருப்பான்.

முதலாளிகிட்ட வந்து, "அவன் சரியில்ல, இவன் சரியில்ல"-ன்னு சொல்லி முதலாளிய நிம்மதியா இருக்க விடமாட்டான்.

பொறுப்பாக வியாபாரத்தை நடத்த விரும்புகிறவன் மற்றவர்களிடம் உள்ள குறைகளை முதலளியிடம் வந்து சொல்லமாட்டான். நூற்றுக்கு 99 சதவீதம், அவர்களைச் சரிப்படுத்த முயற்சி செய்வான் -ஒரு முறையல்ல... பலமுறை.

பலமுறை முயற்சி செய்தும் அவனைத் திருத்த முடியவில்லையென்றால் மட்டுமே முதலாளியிடம் சொல்வான்.

அதுவும், அவரது "மூட்" பார்த்து, இதமாக எடுத்துச் சொல்வான்.

நாம அந்த இதமாகச் சொல்லும் ரகமாகத்தான் இருக்கணும்.

நாம் குற்றம் சாட்டுவதாக இருக்கக்கூடாது. "பல முறை நான் சொல்லிப்பார்த்துட்டேன். நீங்க சொன்னாக் கேட்பான்னு நினைக்கிறேன்... அப்புறமா அவனைத் தனியாக் கூப்பிட்டு பேசி பாருங்க" -ன்னு ஒரு நல்ல மதி மந்திரியா செயல்படனும்.

தலைக்கனம் பிடித்தவன் போடுகிற தடாலடியில "இங்க கிடந்து இவங்கிட்ட பாட்டுவாங்குறதவிட வேற எங்கயாவாது போய் தொலையலாம்"னு பாதிக்கப்படுறவன் நினைக்கவேண்டியது வரும்.

ஆனால் நாம இதமாச் சொல்றதுல, அவனுக்கு நம்ம பேர்ல ஒரு நல்ல அபிப்பராயம் வரும்.

அதுமட்டுமல்ல, நம்ம முதலாளிக்கு நாம செய்யிற மகத்தான் தொண்டு. அது.

காரணம்...

வேலைக்கு ஆள் கிடைக்கிறதே பெரிய குதிரைக் கொம்பாக இருக்கிற இந்தக் காலத்துல, நாம ஒவ்வொருத்தரா குறை சொல்லி விரட்டிட்டால் வியாபாரம் அம்போதான், முதலாளி பாடு திண்டாட்டம் தான்.

அதுக்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது.

என்ன செய்யணும்...?

அனுசரித்துப் போகணும்.

அனுசரித்துப் போவது கூட சாதாரண மனிதனின் சாதாரணத் திறமைதான்.

பின்ன என்ன செய்யணும்..?

அரவவணைத்துப் போவதுதான் சிறப்பான செயல் - தனித்தன்மை.

அந்தத் திறமையை வளர்த்துக் கொண்டால், அப்புறம் நாம்தான் அங்கே எல்லாம்.

பத்து மாடு கட்டியிருக்கிற தொழுவுல ஒரு மாடு முட்டும், ஒரு மாடு எத்தும், ஒரு மாடு வாலை எடுத்து அடிக்கும்.

"இதெல்லாம் சகஜம்தானே"-ன்னு ஈசியா எடுத்துக்கணும்.

"நீ எப்படிடா என்ன உரசுறது"-ன்னு மல்லுக்கு நிக்கக் கூடாது.

"சார் அடிக்கிறான் சார்.. சார் கிள்றான் சார்"-னு எல்கேஜி பையன் மாதிரி, முதலாளிகிட்ட கம்ப்ளெயின்ட் பண்ணக் கூடாது.

நாமதான் முதலாளிகிட்ட நல்ல அபிப்பிராயத்துல இருக்கோம், நாம எது சொன்னாலும் கேட்பாரு", -ங்கிற எண்ணத்துல அவரிடம் போய் புகார் பண்ணக் கூடாது.

பண்ணினால்...

புகார் செய்யப்பட்டவனுக்கு நம் மீது கோபம் எரிச்சல்,

முதலாளிக்கும், "என்னடாயிது... எப்பப் பார்த்தாலும் நம்மள வந்து டென்ஷனாக்குறானே" -ன்னு சலிப்பும் வெறுப்பும் வந்துடும்,

அது மட்டுமல்ல...

"நாம இவ்வளவு சொல்றோம், முதலாளி கண்டுக்கவே மாட்டேங்கிறாரேன்னு முதலாளி மேல நமக்கு ஒரு அவநம்பிக்கை வர ஆரம்பிக்கும்.

அப்படி அவ நம்பிக்கை வருவது ஆரோக்கியமான செயல் அல்ல.

அப்படி வந்துவிட்டாலே, முதலாளிமீது உள்ள பிடிப்பு விட்டுப் போய்விடும்.

நெல் பிரிந்து உமியும் அரிசியும் ஆகிற மாதிரி ஆகிவிடும்.

உமியும் அரிசியும் ஒன்றாக இணைந்திருந்தால்தான் அது விதையாகும், முளைவிடும், பயிராகும் பல நூறு நெல்மணிகளாய் விளையும்.

எனவே முதலாளிக்கு ஏற்ற மாதிரி நடந்து, நல்ல பெயர் எடுக்க வேண்டுமே தவிர, எக்காரணம் கொண்டும் தெனாவட்டு வரவே கூடாது.

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.



பயமே வீழ்ச்சி !
துணிவே வெற்றி !!
உழைப்பால் உயர்ந்த மனிதநேயர் - நேர்மையின் சிகரம்
மயிலை C.பெரியசாமி
அவர்களின்
10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி
P.சந்திரசேகர்
MCA.,MSC.,MBA.,
P.இளையமாறன்
BE.,MS(US)
A.P.பெரியசாமி
D.வெள்ளத்துரை
E.அன்புநாதன்
S.கருப்பசாமி
அண்ணாச்சி குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்

Regd.No.TN/CC(S) DN/112/2021-2023
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.11.2023
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/21-23

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

# 9ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி
# தீத்தாம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.



மறைவு:3.11.2014

எங்களது தாயாரும் திரு.ஆ.தங்கப்பநாடார் அவர்களின் துணைவியாருமான

**திருமதி.சீனியம்மாள்** அவர்கள் பிரிவால் வாடும்

## மகன்கள்-மருமகள்கள்

T.சோலையப்பன்-புஷ்பம்,
T.பரமசிவன்-உண்ணாமலை
T.மாரியப்பன்-சந்திரா
T.முருகன்-தங்கம்

## மகன்கள்-மருமகள்கள்

R.கருப்பசாமி -மாரியம்மாள்
A.சங்கரநாராயணன்-பொன்னுத்தாய்
V.பாலசுப்பிரமணியம்-சின்னத்தாய்
A.தங்க வேல்சாமி-ஜெயலட்சுமி

பேரன்கள், பேத்திகள், கொல்லு பேரன்கள், கொல்லு பேத்திகள் மற்றும் உற்றார் உறவினர்கள்

அடையார் ஆனந்த விநாயகர் காய்கனி & பழங்கள் அங்காடி

69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார்-20. செல்:9840038140.